Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 19 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 21 (03.03.2005) வியாழக்கிழமை இதழ்: 154




## யாழ். குடாநாட்டில் நேற்று

# 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அணிதிரண்ட ஆர்ப்பாட்டப் பேரணி!




(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதனை உரியமுறையில் நடைமுறைப்படுத்தக் கோரியும் - விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீதான தாக்குதல்கள், படுகொலைகளைக் கண்டித்தும் - வெளிநாடுகள் வழங்கிய சுனாமி நிவாரணத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியாகப் பங்கிடப்படாததை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையிலும் யாழ்.குடாநாட்டில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## படுகொலைகளை ஆராயும் குழு மீது எந்தவித நம்பிக்கையும் எமக்கில்லை!

## நாடு பிளவுபடுவதைத் தடுப்பதற்கான ஒரேவழி சமஷ்டி நிர்வாக முறைதான்!



தாக்குதல்கள், படுகொலைகளைக் கண்டித்தும்

வெளிநாடுகள் வழங்கிய சுனாமி நிவாரணத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியாகப் பங்கிடப்படா ததை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையிலும் யாழ்.குடாநாட்டில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




# படுகொலைகளை ஆராயும் குழு மீது எந்தவித நம்பிக்கையும் எமக்கில்லை!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கொழும்பு)

வன்முறைச் சம்பவங்கள் பற்றி ஆராயஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட குழுக்கள் தொடர்பாக எமக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் இதுபோன்று கடந்த காலங்களில் சந்திரிகா அம் மையாரின் ஆட்சிக்காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் தொடர் பாக விசாரணை நடத்த இவ்வாறான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட வரலாறு நிறையவே உள்ளன. தற்



போது அமைக்கப்பட்ட ஆணைக் குழுவும் நீதி வழங்கும் என்ற நம் பிக்கை எமக்கு சிறிதளவேனும் இல்லை. இதை கண்துடைப்பு நட வடிக்கையாகவே நாம் பார்க்கிறோம் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது –

கண்காணிப்புக்குழு ஊடாக நோர்வே அனுசரணையாளர் மூல

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடு பிளவுபடுவதைத் தடுப்பதற்கான ஒரேவழி சமஷ்டி நிர்வாக முறைதான்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு இனப்பிரிவினருக்கு பூரண சுதந் திரமும் அதிகாரமும் கிடைக்கும் வகையிலான சமஷ்டி நிர்வாக முறையொன்றை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தன்னை அர்ப்பணித் துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் வொஷிங்ரனில் நடைபெறவுள்ள எதிர்கால உல கத் தலைவர்களுக்கான மாநாட் டில் இலங்கையின் சார்பாகக்



கலந்துகொள்ளவுள்ள மாணவர் கள் முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில் –

நாடு துண்டாடப்படுவதை யும் தனிராஜ்ஜியம் உருவாவதை யும் தடுப்பதற்கான ஒரே வழி சமஷ்டி நிர்வாக முறையை ஏற் படுத்துவதாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரின் மனைவிக்கு மரணதண்டனை!

(கொழும்பு)

கத்தோலிக்க விவகார மற்றும் நாடாளு மன்ற விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண் டோவின் மனைவி உட்பட நால்வருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று மரண தண் டனை விதித்தது.

1991 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதிக் கும் 92 ஜனவரி முதலாம் திகதிக்கும் இடைப் பட்ட காலப்பகுதியில் இரண்டு பெண்களைக் கடத்திச் சென்று படுகொலை செய்ததான குற்றச்சாட்டின் பேரிலேயே நால்வருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இந்தவழக்கு விசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல்நீதிமன்றத்தின் நான்கு நீதிபதி களும் ஏகமனதாக நால்வரையும் குற்றவாளி களாகக் கண்டு இந்தத் தீர்ப்பை நேற்றிரவு வழங்கினர்.

அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோவின் மனைவி யூலியட் மொனிக்கா பெர்னாண்டோ, அஜித் பிரியங்கர பெரேரா, நெவில் றோகண பீரிஸ், சுகத் கிரிசாந்த ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

# ஜனாதிபதியுடன் சமரசத்துக்கு ஜே.வி.பி. புதிதாக நிபந்தனை!

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜே.வி. பிக்கும் ஜனாதிபதிக்குமிடையில் தோன்றியுள்ள சிக்கலுக் குத் தீர்வுகாணவேண்டு மெனில் இடைக்காலநிர்வாக சபை தொடர்பாக பேச்சு நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக அரசு கடந்த வாரம் வெளியிட்ட உத்தி யோகபூர்வ அறிக்கையை இரத்துச் செய்யவேண்டு மென ஜே.வி.பி. – அரசாங்கத்திடம் கேட் டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரி விக்கின்றன.



சோம வன்ச அமரசிங்க

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமருடன் ஜே.வி.பியின் தலைவர் சோம வன்ச அமரசிங்க நடத்திய பேச்சுவார்த்தை யின்போதே இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் சுமார் இரண்டரை மணிநேரம் நடைபெற்ற இந் தக் கலந்துரையாடலில் கதிர்காமரும் சோமவன்ச அமரசிங்கவும் மட்டுமே கலந்துகொண்டனர்.

இடைக்கால நிர்வாக சபை குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரை யாடுவதற்கு தயாராக இருப்பதாக அரசாங் கம் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிவிப் பால் ஜே.வி.பி. கடும் விசனம் அடைந்துள்ள தாகவும் – எனவே இதனை இரத்துச் செய் யும்வரை ஜனாதிபதியுடன் எந்தவித சமரசத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



கூரையில ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவ சமஷ்டியைக் கொடுக்கப் போறாவோ...!

# நெரிசலில் சிக்கிய ஐவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று நடைபெற்ற கண் டனப் பேரணியின் போது பொதுமக்கள் மீது இராணுவத்தினர் ஆயுதத்தைக்காட்டி மிரட் டியதை அடுத்து ஏற்பட்ட நெரிசலில் ஐந்து பொதுமக்கள் காயமடைந்ததுடன் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

## போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடைவதற்குள்

# சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஐ.நா. செயலருக்கு பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

தமிழீழ விடுதலைப்புலிகள் முன் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப் படையில், அரசு பேச்சுக்களை ஆரம் பிக்காது காலம் தாழ்த்தி வருகின் றமை விடுதலைப்புலிகளை பொறுமை இழக்கச் செய்துள்ளது.

இதனால் போர்நிறுத்த உடன் படிக்கை முறிந்துவிடுமோ என்ற அச்சம் வட-கிழக்கு தமிழ் மக்களி டையே ஏற்பட்டுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கையில் முறிவு ஏற்படுவ தற்கு முன்னதாக விடுதலைப்புலிக ளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத் தம் கொடுக்க வேண்டுமென யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன் றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து மூன்று வருடங்கள் கடந்த நிலை யிலும், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதிலும், உடன்படிக் கையை உரிய முறையில் அமுல் படுத்துவதிலும் இழுத்தடித்து வரு வது உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற கண்டனப் பேர ணியின்போது, ஐ.நா.பொதுச் செய லர் கொபி அனானுக்கு அனுப்பி வைத்த மகஜரிலேயே இந்த வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது –

இயல்பு நிலையை தோற்றுவிக் கவும், இடம் பெயர்ந்த மக்கள் தத் தமது வீடுகளில் மீளக் குடியேறவும் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப் பவும் சமாதான நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கு டன், யுத்த நிறுத்த ஒப்பந்தம் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அரசுக்கும் தமிழீழ தேசிய தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்குமிடையில் கைச்சாத் திடப்பட்டது. கடந்த மூன்று வருடங் களில் இடம்பெற்ற பல்வேறு இரா ணுவ சீண்டுதல்களுக்கு மத்தியி லும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் தாக்குப்பிடித்தது ஆறுதல் அளிப் பதாகவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் நோக்க மும், இலக்கும் அரசினால் நிறை வேற்றப்படவில்லையென்பது, விரக்தி அளிப்பதும் ஏமாற்றம் அளிப் பதுமாகும். இயல்பு நிலை தோற்று விக்கப்படாமையும் இடம்பெயர்ந் தவர்கள் தமது இருப்பிடங்க ளுக்கு மீளக்குடியேற உயர் பாது காப்பு வலயம் என்ற போர்வையில் அனுமதி மறுக்கப்பட்டமை என்பது பற்றி யும் அடிப்படை மனிதஉரிமை மறுப்பு தொடர்பாகவும் மீன்பிடி மற்றும் விவசாயம் சார்ந்த மக்கள் தமது தொழில்களை மேற்கொள்ள அனுமதி மறுப்பது பற்றியும் வடக்கு – கிழக்கு வாழ் மக்கள் தொடர்ந்து குரல் எழுப்பி வந்துள்ளனர். இடைக் கால தன்னாட்சி அதிகாரசபை உருவாக்கம் பற்றிய தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப்பின் முன் மொழிவுகள் இழுத்தடிக்கப்பட் டும், தாமதப்படுத்தப்பட்டும் வரு கின்றன.

அதேபோல சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நட வடிக்கைகளை கையாள ஒரு மத் திய கட்டமைப்பு உருவாக்கப்படல் என்ற முன்மொழிவும் இங்கு மங் குமாக இழுத்தடிக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்தினால் நாட் டுக்கு வழங்கப்பட்டுவரும் உதவி கள் கையாளப்படுவதில் வெளிப் படைத்தன்மை முழுமையாக இல் லையென்பதை கவலையுடன் குறிப் பிட வேண்டும்.

அரச கஜானாவை வந்தடைந்த நிதியுதவிகள் வடக்கு – கிழக்கு மக்களை வந்தடையவில்லை யென துணிந்து கூறமுடியும். ஒரு உதாரணமாக யாழ்.மாவட்டத்தில் மரணமடைந்த 1240 பேருக்கான ரூபா 15000 கொடுப்பனவு நேற்று வரை (02.03.2005) 828 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. எந்த அனர்த்தமானாலும் சாதாரணமாக வழங்கப்படும் உலர்உணவு விநி யோகம் நலன்புரி நிலைய பரா மரிப்பு போன்றவற்றைத் தவிர வேறெந்த அரச உதவியும் மக்க ளுக்குக் கிடைக்கவில்லை.

போராளிகளையும் உண்மை யான நாட்டுப்பற்றாளர்களையும் தளத்தில் நிலவும் உண்மைநிலையை உலகிற்கு வெளிக்காட்டும் ஊடக வியலாளர்களையும் இலக்கு வைத்த தாக்குதல்கள் சமாதான நடைமுறைகளையும் அடிப்படை மனித உரிமைகளையும் அப்பட்ட மாக மீறும் செயல்களாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில், பேச்சுவார்த்தை களை ஆரம்பிக்க அரசு தவறுவது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பையும் பொறுமையின் எல்லைக்கு தள்ளிவிட்டுள்ளதால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிந்துவிடுமோ என்ற அச் சம் யாழ்.மாவட்ட மக்களிடம் குறிப் பாகவும் வடக்கு – கிழக்கு மக்களி டம் பொதுவாக உருவாகியுள்ளது.

எனவே சர்வதேச சமூகம் முழு நிலமையையும் மீளாய்வு செய்து யுத்த நிறுத்த ஒப்பந்த முறிவு இடம் பெறுவதற்கு முன்னர், அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான அழுத்தங் களைக் கொடுக்கவேண்டுமென இந்தப் பேரணியில் கலந்துகொள் ளும் நாம் வேண்டி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதி இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, ஜனாதிபதி சந்திரிகா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அனைத்து தூதுவராலயங்களுக் கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## திருத்தம்

அரசின் நடவடிக்கைகளை கண்டித்து இன்று மாபெரும் கண்ட னப்பேரணி என்ற தலைப்பில் நேற்று முன்தினம் முன்பக்கத்தில் வெளி யான செய்தியின் தொடர்ச்சியில் பேரணியில் பங்குகொள்ளுமாறு வலி யுறுத்தி என்பதற்குப் பதிலாக வற்பு றுத்தி என தவறுதலாக அச்சாகிவிட் டது. திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

## இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழா

(யாழ்ப்பாணம்)

சட்டநாதர் வீதி நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசை விழா இன்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமைவரை ஐந்து தினங்கள் தொடர்ந்து நடைபெற வுள்ளது.

இதில் முதல் மூன்று நாள் நிகழ் வுகளும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிவரை யிலும், நான்காம் நாள் நிகழ்வுகள் காலை 9 மணியிலிருந்து இரவு 10 மணிவரையும், ஐந்தாம்நாள் நிகழ் வுகள் மாலை 4.30 மணியிலிருந்து 6.15 மணிவரையும் இடம்பெறவுள் ளன.

இந்த ஐந்து நாள் நிகழ்வுகளி லும் மங்கள இசை, திருமுறை அரங்கு, குழுப்பாடல், நாட்டியாஞ் சலி, வயலின் இசை, புல்லாங்குழல் இசை, வீணை இசை, இசைக்கச்சேரி உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாக இளங்கலைஞர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
பரத், சந்தியா மற்றும் பலர் நடித்த
காதல்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)



நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த

திருப்பாச்சி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00



ராஜா யாழ்ப்பாணம்
அஜித் –திரிஷா, மணிவண்ணன், விஜயகுமார் நடித்த
ஜி

கா.நே: 10.30, 2.30, 6.30,
4 முதல் சிம்பு, ஜோதிகா நடித்த மன்மதன்



மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த

சு★க்★ர★ன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


# நீங்காத நினைவில் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பின் திருவுருவமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் சிகரமாய்,
ஊர்புகழும் உத்தமனாய்
வாழ்ந்து எமக்கெல்லாம்
வழிகாட்டிய தெய்வமே!
நீங்கள் மறைந்து
இரண்டாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு
என்றென்றும்
எம் மனதை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்
12
06
1951

மறைவு
24
02
2003



## செல்லர் சின்னத்துரை

திதி: 03.03.2005

நாச்சிமார் கோயிலடி,
கரணவாய் வடமேற்கு,
வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நினைவில் வாடும்
குடும்பத்தினர்.
மகன் சுதாகரன் (லண்டன்)

(1073)

# ஐ.தே.கவின் முயற்சிகள் வெற்றியளிக்கமாட்டாது!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சீர்குலைக்கும் வகையில் ஐ.தே.கட்சியும், அதற்குச் சார்பான ஊடகங்களும் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியளிக்கமாட்டாதென, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது –

இத்தகைய முயற்சிகளை ஐ.தே.கட்சி கைவிட்டு, தமது உட்பூசல்களை அந்தக் கட்சி தீர்த்துக்கொள்வது சிறந்தது.

அதிகாரத்திலுள்ள அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிர்க் கட்சியும், அதற்கு ஆதரவான ஊடகங்களும் செயற்பட்டு வருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசு – இன்றோ அல்லது நாளையோ கவிழ்ந்து விடுமென இவர்கள் மக்களை நம்பவைக்க முயல்கின்றனர். இவர்களது இந்த முயற்சிகள் ஒருபோதும் நிறைவேறமாட்டாதென உறுதியாகக் கூறுகிறேன்.

சோர்வடைந்துள்ள தமது கட்சி உறுப்பினர்களை ஊக்கப்படுத்துவதற்காக, ஐ.தே.கட்சி இவ்வாறு தெரிவித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

(தே)

## வீதி விபத்தில் படுகாயம்

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில்நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளும், ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கொட்டடியைச் சேர்ந்த ரமேஸ்குமார் என்பவரே காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவதினம் இரவு 8 மணியளவில் கொட்டடியிலுள்ள தனது வீட்டுக்கு ஓட்டோவில் சென்று கொண்டிருந்தவேளை, வழியில் வந்த மோட்டர் சைக்கிள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

# மேலும் 29 எலும்புக்கூடுகள் சேற்றிலிருந்து கண்டுபிடிப்பு!

சுனாமி அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த ரயில் பயணிகளில் மேலும் 29 பேரது சடலங்கள் எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை 29 எலும்புக்கூடுகள் – சேற்றுக் குழியில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து அது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, மறுநாள் இந்த 29 எலும்புக்கூடுகளும் சேற்றுக்குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக, மீற்றியகொட பொலிஸ் நிலைய அதிகாரி கொன்சுல் கோரள தெரிவித்தார்.

மீட்கப்பட்ட 29 எலும்புக்கூடுகளும் காலி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த எலும்புக்கூடுகள் – கண்டுபிடிக்கப்பட்ட இடம் கொழும்பிலிருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



சுவிஸ் நாட்டுக்குச் சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுக் கலைஞர்கள் அங்கு புலியாட்டம் ஆடு என்ற பாடலைப் பாடி அங்கு குழுமியிருந்தவர்களையும், ஊடகவியலாளரையும் கவர்ந்திழுத்த காட்சி

# பெண்போராளிகள்மீதான தாக்குதல் மீண்டும் வன்முறைக்கு வழிவகுக்கும்!

## சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை, இலங்கையில் மீண்டும் வன்முறைகளுக்கு வழிவகுக்கக்கூடிய அபாய நிலையைத் தோற்றுவித்திருப்பதாக, சர்வதேச செய்தி நிறுவனங்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ் டோட்ரயர் ஆகியோர் இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிவித்திருக்கும் கருத்துக்களைச் சுட்டிக்காட்டியே சர்வதேச நிறுவனங்கள் இந்தச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

அம்பாறை–திருக்கோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மூன்று பெண் போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தைக் கொண்டே, இந்தத் தாக்குதல் படையினரின் உதவியுடன் நடத்தப்பட்டிருப்பதை ஊகிக்கமுடியும் என்றும் –

இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால், அதைத் தம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்றும் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவி த்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவம் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், தாம் இந்தத் தாக்குதல் சம்பவத்தைப் பாரதூரமானதாகக் கருதுவதாகவும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ல்டோட்ரயர் தெரிவித்தார்.

எனவே, இத்தகைய தாக்குதல்களால் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இது மீண்டும் வன்முறைகளை ஏற்படுத்தக்கூடிய அபாய நிலையைத் தோற்றுவிப்பதாகவும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

# கல்முனையில் புதிய நகரை நிர்மாணிக்க நிதியுதவி!

சுனாமி அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கல்முனைப் பகுதியில் புதிய நகரமொன்றை நிர்மாணித்து வழங்குவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் முன்வந்துள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் புதிய தூதுவர் மொகமட் அல் மஃமூட் – ஜனாதிபதி சந்திரிகாவைக் கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோது, இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இதன்படி அமைக்கப்படவுள்ள நகரத்தில் – புதிய வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் பிறவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்த முன்வந்த ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா – சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டுமானம் தொடர்பாக அரசின் திட்டங்களையும் தூதுவருக்கு வழங்கினார்.

# சுனாமி நிவாரண மோசடி மட்டக்களப்பில் மறியல்

மட்டக்களப்பு–வாழைச்சேனை பிரதேச செயலகம் முன்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று மறியற்போராட்டம் ஒன்றை நடத்தி னர்.

இதனால் நண்பகல் வரை பிரதேச செயலகத்தின் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

பேத்தாழை, பாசிக்குடா, கல்குடா, கல்மடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றன.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட – தமக்கு உரிய முறையில் அரசாங்கம் நிவாரணம் வழங்கவில்லை என்றும் –

நிவாரண முத்திரைகள் விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மக்கள் முறையிட்டனர்.

இந்த குறிப்பிட்ட ஊழல் மோசடியுடன் தொடர்புடைய அதிகாரிகள் – உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவதோடு, இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வாசக அட்டைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர்.

# சைவப் புலவர் கந்தசாமிக்கு பணிநலன் பாராட்டு விழா



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் – கால் நூற்றாண்டுக்கு மேலாகப் பரீட்சைச் செயலாளராகவும், தற்போதைய தலைவராகவும் விளங்கும் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் சேவைநலன் பாராட்டு விழா, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் உபதலைவர் இ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சைவபரிபாலன சபையால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி பதவிக்காக தான் போராடுவாராம்!

## அனுரா பண்டாரநாயக்க சொல்கிறார்



(கொழும்பு)

பிரதமர் பதவியில் அமர தான் மறுப்புத் தெரிவித்ததாலேயே மகிந்த ராஜபக்ஷ அந்தப் பதவிக்கு வர முடிந்ததென, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசசபை மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் பதவியில் இருக்குமாறு ஜனாதிபதி என்னையே முதலில் கேட்டார். ஆனால் நான் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டேன். ஏனெனில், ஜனாதிபதியும் நானும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இரண்டுபேரும் இந்த நாட்டை ஆட்சி செய்தால் அது ஒரே குடும்ப ஆட்சியாகப் போய்விடும். அத்துடன், எம்மீது குற்றச்சாட்டுக்களும் வந்துவிடும். எனவேதான் நான் பிரதமர் பதவி வேண்டாமென மறுத்து விட்டேன். இதன் பின்னரேயே மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஆனால், ஒவ்வொரு தடவையும் நான் தியாகம் செய்யமுடியாது. இன்னும் சிலகாலங்களில் ஜனாதிபதி அரசியலிருந்து ஓய்வுபெறுபவராக இருந்தால் - சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி மற்றும் அரசாங்கத்திலுள்ள மற்றைய கட்சிகளின் ஆதரவுடன் அந்தப் பதவிக்காக நான் போராடுவேன்.

நாடாளுமன்றில் விமல் வீரவன்ச உரையாற்றியது தொடர்பாக அரசாங்கத்திலிருந்து ஒருகட்சி பிரிந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து சிந்தித்துப் பார்க்குமாறு, வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை நான் கேட்டிருந்தேன்.

எனக்குத் தெரியும் பண்டாரநாயக்கக்களை அகற்றவே ஐ.தே. கட்சி விரும்புகிறது. அவர்கள் மூன்று தனியார் தொலைக்காட்சி நிலையங்களை வைத்துள்ளனர்.

இதனால் நீங்கள் செய்தித்தாள்களைப் படிப்பதோ அல்லது தொலைக்காட்சியைப் பார்ப்பதோ பிழையல்ல. ஆனால், நான் உங்களைக் கேட்பது அவர்களது ஒவ்வொரு விடயத்தையும் நம்ப வேண்டாம் என்பதுதான் எனத் தெரிவித்தார்.

# ஆட்டம் கண்டுள்ள அரசாங்கத்துக்கு அடுத்த இரு மாதங்களும் சிக்கலானவை

## அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்

கூட்டணிக் கட்சிகளின் உதவியுடன் ஆட்சியமைத்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கு – நித்தியகண்டம் ஆரம்பித்து விட்ட நிலையில், ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கும், ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அரசியல் வியூகத்தை அமைத்துக் கொள்வதற்கும் அடுத்த இரண்டு மாதங்கள் மிகுந்த சிக்கலானவையாக அமையப் போகின்றன என்று அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதியுடனான முரண்பாடுகள் முற்றிவிட்ட நிலையில், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு –அடிப்படையில் புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பித்தால், அரசை விட்டு வெளியேறப்போவதாக ஜே.வி.பி அறிவித்து விட்டது.

இதனை மீறி புலிகளுடன் பேச்சுக்களை ஜனாதிபதி ஆரம்பித்தால்,ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற ஆசனங்களை அரசு இழக்க நேரிடும். இந்த வெற்றிடத்தை 22 ஆசனங்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிரப்பினாலும், பெரும்பான்மைக்கு தேவையான பலம் அரசுக்கு கிட்டப்போவதில்லை.

ஆனால் ,ஜே.வி.பி அரசை விட்டு வெளியேறினால் நிபந்தனையின் அடிப்படையில் ஆதரவளிக்க தயாரென அறிவித்த ஐக்கிய தேசியக் கட்சி முண்டு கொடுத்தால், அரசு தடங்கல் இன்றி ஆட்சியை தொடர்ந்து கொண்டு நடத்த முடியும்.

இந்தப் படிமுறைக்கு ஜனாதிபதி ஆயத்தமாக வேண்டும். அல்லது –

நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு, தேர்தலுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். இன்றைய நிலையில் தெற்கில் ஜே.வி.பியின் கை ஓங்கியுள்ள நிலையில் -ஜனாதிபதி அவ்வாறான ஒரு முடிவுக்கு இறங்குவாரா என்பது அடுத்த கேள்வி.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதி எடுக்கப்போகும் முடிவு – வரப்போகும் ஜனாதிபதி தேர்தலை கருத்திற் கொண்டதாகவும் அமைய வேண்டும் என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இரு முடிவுகளில் ஜனாதிபதியின் தெரிவு நாட்டின் அத்தியாயத்தில் பாரிய மாற்றத்தை உண்டு பண்ணப்போகிறது என அவர்கள் மேலும் கருத்து தெரிவித்தனர்.

## டுபாய் ஓபன் ரெனிஸ்

# யு.எஸ்.ஓபன் சம்பியனை வீழ்த்தினார் சானியா!



துபாய் ஓபன் ரெனிஸ் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா முன்னணி ரஷ்ய வீராங்கனையை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றுவரும் டுபாய் ஓபன் ரெனிஸில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா ஆடிவருகின்றார். குரோஷிய நாட்டு வீராங்கனை ஜெலினா கோஜ்தானிகை – சானியா தோற்கடித்து 2 ஆவது சுற்றில் நுழைந்தார்.

சானியா இரண்டாவது சுற்றில் நேற்றுமுன்தினம் ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா குஸ்னெட்சோவாவை எதிர்த்து விளையாடினார். ஸ்வெட்லானா உலக ரெனிஸ் தரவரிசையில் 6 ஆவது இடத்தில் உள்ளவராவார்.

அத்துடன் அவர் தற்போது யு.எஸ். ஓபன் சம்பியன் ஆவார். இந்தநிலையில் ஸ்வெட்லானாவை எதிர்த்துக் களமிறங்கிய சானியா – முதல் செட்டில் 4–0 என்ற அடிப்படையில் பின்தங்கியிருந்தார். இருப்பினும் சானியா சளைக்காமல் ஆடி முதல்செட்டை 6–4 என ஸ்வெட்லானாவிடம் இருந்து பறித்தார்.

2 ஆவது செட்டிலும் அபாரமாக ஆடிய சானியா 6–2 என்ற செட் கணக்கில் ரஷ்ய வீராங்கனையை வீழ்த்தி வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம் சானியா காலிறுதிப் போட்டிக்குள் நுழைந்திருக்கிறார். தற்போது சானியாவையும் சேர்த்து 8 வீராங்கனைகள் மட்டுமே களத்தில் உள்ளனர்.

இத்தாலிய வீராங்கனை எலியா சில்வியா பரினா – ஜெலினா ஜாக்கோவிக் ஆகியோர் இடையே நடக்கும் போட்டியில் யார் வெற்றிபெறுகிறாரோ? அவருடன் சானியா மோத இருக்கிறார். டுபாய் ஓபன் ரெனிஸ் போட்டியில் பிரபல வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறி விட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றிக்கான போராட்டத்தில் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம்

## இன்சமாம் சபதம்



(தர்மசாலா)

சொஹைப் அக்தருக்கு இணையாகப் பந்துவீசும் வீரர்கள் அணியில் உள்ளனர். ஆதலால் அவர் இல்லாத குறையை மற்ற வீரர்கள் சமாளித்து விடுவர் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் உல் –ஹக்.

தர்மசாலாவில் செய்தியாளர்களிடம் பேசிய இன்சமாம் –

அக்தர் இல்லாதது உணரப்பட்டாலும், அவர் இல்லாத இடத்தைப் போக்கும் விதமாகப் பந்துவீச்சாளர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அவர்கள் அக்தருக்கு இணையாகத் திறமையை வெளிப்படுத்தி ஆட்டத்துக்கு சுவாரஸ்யம் அளிப்பார்கள் என நம்புகிறேன்.

தற்போதைய அணி ஆட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துமா எனக் கேட்டபோது –


போதுமான பந்துவீச்சாளர்களும், துல்லியமாகப் பந்தை விளாசுபவர்களும் அணியில் உள்ளனர். பின்னர் வேறு என்ன வேண்டும்? வெற்றிக்காகப் போராடுவதிலிருந்து ஒரு அங்குலம் கூடப் பின்வாங்கமாட்டோம் என்றார் இன்சமாம்.

### தடகளப் போட்டி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த தடகளப்போட்டி எதிர்வரும் வெள்ளி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8.30 மணி முதல் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென கோட்டக் கல்வி அதிகாரி கைலைநாதன் தெரிவித்தார். (72)

## சதுரங்கப் புதிர்



தொகுப்பு – சி. வித்தியாதரன்.

இன்றைய கேள்வி:


கறுப்பு முதல் நகர்த்தி வெற்றியை தனதாக்கிக்கொள்வது எப்படி? . *(விடை நாளை)*

நேற்றைய கேள்விக்கான விடை:

$1\ldots qg_1{+}2Kc_2qh_2{+}3Kc_1qxb6$ என நகர்த்துவதன்மூலம் கறுப்பானது தனக்கு இருந்த Check Mate இனையும் தடுத்து வெள்ளையிடம் இன்னொரு Pawn இனையும் வெட்டிவிடுகிறது.

# சூதாட்டப் புகாரினாலேயே யுகானா நீக்கப்பட்டாரா?

## பாகிஸ்தான் பத்திரிகை செய்தி




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துணைக் கப்டன் பதவியிலிருந்து யூசுப் யுகானா நீக்கப்பட்டதற்கு அவர் மீதான சூதாட்டக் குற்றச்சாட்டே காரணம் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இதேவேளை, பத்திரிகையில் வெளியான இந்தச் செய்தியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்துள்ளது. இது தொடர்பாக கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார் கான் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்தியாவுடனான தொடர் முக்கியமானது. இதில் யுகானா துடுப்பாட்டத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டியிருக்கும். இதனால்தான் அவரிடமிருந்து துணைக் கப்டன் பதவி எடுக்கப்பட்டது. பத்திரிகைச் செய்தியில் எந்த உண்மையும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹீத் ஸ்ரீக் மீண்டும் சிம்பாப்வே அணியில்



சிம்பாப்வே அணியில் வேகப் பந்து வீச்சாளர் ஹீத் ஸ்ரீக் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணியின்கடைசிஆட்டம் இன்று தென்னாபிரிக்காவுக்கெதிராக நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான சிம்பாப்வே அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீக் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய ஸ்ரீக் அணியில் இருந்து விலகினார். இதன்பின்னர் சிம்பாப்வே அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்த ஸ்ரீக் தன்னுடன் மற்ற சில வீரர்களை சேர்த்துக்கொண்டு பெரிய போராட்டம் நடத்தினார்.

இதன் காரணமாக வெள்ளை இனத்தைச் சேர்ந்த வீரர்கள் அனைவரும் சிம்பாப்வே அணியில் இருந்து நீக்கப்பட்டனர். இதன் பின்னர் தைபு தலைமையில் புதிய அணி உருவாக்கப்பட்டது.

தற்போது சிம்பாப்வே அணியி[illegible]னான பிரச்சினை முடிவுக்கு வந்ததை அடுத்து ஸ்ரீக் மீண்டும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார். சிம்பாப்பே நாட்டில் அதிக விக்கெட் சாய்த்த வீரர் என்ற பெருமையைப் பெற்றிருக்கும் ஸ்ரீக் கூறுகையில் –

தைபு தலைமையிலான அணிக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்ய முடிவுசெய்திருக்கிறேன். என்னுடைய அனுபவம் நிச்சயம் அவருக்கு உதவியாக இருக்கும் என்றார்.

# பாகிஸ்தான் சவாலை சந்திக்கத் தயாராம்!

## இப்படிச் சொல்கிறார் கங்கூலி

பாகிஸ்தான் அணியின் சவாலை சந்திப்போம் என்று இந்திய அணியின் கப்டன் கங்கூலி தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டி தொடர்பாக கங்கூலி கூறுகையில் –

இந்தியா –பாகிஸ்தான் மோதல் என்றாலே சவாலுக்குப் பஞ்சம் இருக்காது. இன்சமாம் தலைமையில் தற்போது இந்தியா வந்திருக்கும் பாகிஸ்தான் அணியும் அதிக சவால் நிறைந்தது.

ஆனால், உள்ளூரில் நடக்கும் இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் சவாலைச் சந்திக்க இந்தியா தயாராக இருக்கின்றது. சொந்த மண்ணில் துடுப்பாட்டத்தில் மட்டுமன்றி – பந்து வீச்சிலும் சிறப்பான சாதனைகளை இந்திய அணி செய்திருக்கிறது.

ஹர்பஜன் மற்றும் கும்ளே ஆகியோரின் சாதனைக்கு அளவே கிடையாது. இந்திய அணிக்கு தொடர்ந்து 5 ஆண்டுக்கும் மேலாக நான் கப்டனாக இருந்துவருகின்றேன். இதில் பல்வேறு விதமான சவால்களைச் சந்தித்துள்ளேன். இந்திய வீரர்கள் இந்தக் காலகட்டத்தில் எனக்குக் கொடுத்த ஆதரவுக்கு அளவே கிடையாது. என்றார்.

பங்களாதேஷுக்கு எதிரான இந்திய அணியில் ஒருசில இளம் வீரர்கள் வாய்ப்புப் பெற்றனர். லக்ஷ்மன் ஒருநாள் போட்டியில் இடம்பிடிக்கவில்லை. இருந்தபோதும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியின்போது அவரின் பெயர் பரிசீலிக்கப்படும்.

சர்வதேச அணிக்கு கப்டனாக இருப்பது சாதாரண விஷயம் கிடையாது. சர்வதேச அளவில் பொண்டிங் தவிர – இன்சமாம், வோகன், லாரா ஆகியோரும் கப்டன் பதவியுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் நான் இந்தச் சோதனையில் இருந்து மீள்வேன். 2005 ஆம் ஆண்டில் அதிக ஓட்டங்களை எடுக்கக் காத்திருக்கிறேன் என்றார்.

## விளையாட்டு

# வலிகாமம் வலயத்தில் ஸ்கந்தா அணி சம்பியன்

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்டோருக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதய கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின இதில் ஸ்கந்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 81 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 66 ஓட்டங்களைப் மட்டும் பெற்று தோல்வி அடைந்தது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணியும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 53 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய சிவப்பிரகாச மகாவித்தியாலய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இறுதிப் போட்டியில் சிவப்பிரகாச மகாவித்தியாலய அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 79 ஓட்டங்களை 9 விக்கெட்டுக்களை இழந்து பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களை இழந்து இறுதி ஓவரில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது. (47)

# சமநிலையில் முடிவுற்ற கிரிக்கெட் போட்டி!

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுவிராஜ் 32 ஓட்டங்களையும், டக்சயன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக வல்லவகுமரன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருபாகரன் 72, வாசிகன் 71, பிரதாபன் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

யூனியன் கல்லூரி சார்பில் கோதிப் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் யூனியன் கல்லூரி அணி துடுப்பெடுத்தாடி 5 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்களைப் பெற்றது. டக்சயன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், யுவிராஜ் 23 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த நிலையில் ஆட்டநேரம் முடிவுற்றதால் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தது. (72)

### உதைபந்தாட்டப் போட்டி

(சுழிபுரம்)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என விளையாட்டு அலுவலர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 27 ஆம் திகதி நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாகவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (47)

# பொதுச்சேவையில் ஈடுபடுவோர் தொகை அருகிக்கொண்டே வருகின்றது!

## நீதிபதி சரோஜினி இளங்கோவன் கவலை

சுயநல நோக்கில் செயற்படும் இந்தக் காலத்தில் பொதுச்சேவை செய்பவர்களைக் காண்பதே மிக மிக அரிது. பொருள் இருந்தாலும் அதை வழங்க நல்மனம் வேண்டும். எம் முன்னோர் வாழ்ந்த காலத்தில் பல நல் மனம் படைத்தவர்கள் வாழ்ந்தார்கள்.

தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்தார்கள். இதனால் அந்தக் காலம் பிரச்சினைகள், சண்டை சச்சரவுகளற்ற நிம்மதியான வாழ்க்கையாக வாழ்ந்தார்கள். என மல்லாம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன் தெரிவித்தார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் பொதுப் பணியைப் பாராட்டி சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் (பிரிவு 306 பி) ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் பாட சாலையில் நடைபெற்ற இந்தப் பாராட்டுவிழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையல் –

இந்த நூற்றாண்டிலும் அதைத் நிருபிப்பதுபோல ஒரு சிலர் எம்மவர் மத்தியில் வாழ்கின்றார்கள். அவர்கள் தம்மிடம் பொருள், செல்வம் இல்லாவிட்டாலும், பிறநாடுகள், செல்வந்தர்களிடம் சென்று தமது சொற்திறமையால் பொருட்களைப் பெற்று, அவற்றை நலிவடைந்தவர்களுக்கும், நலன்புரி நிலையங்களுக்கும் வழங்கி அளப்பரிய சேவை செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் நன்றி தெரிவிப்பது எமது கட்டாய கடமையாகும்.

லயன்ஸ் கழகத்தின் தலைவர் த.அரியரத்தினம் உரை நிகழ்த்துகையில் –

முன்னர் இருந்த லயன்ஸ் கழகத்தைக் காட்டிலும் தற்போது அதன் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இலவசமாகக் கண்பரிசோதனை, சலம், இரத்தம் பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்குவது, ஏழை மாணவர்களுக்கு உதவுவது, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் கொடுப்பது போன்ற எண்ணற்ற சேவைகளைச் செய்து வருகிறது. சேவைகள் அதிகரிப்புக்கேற்ப அதன் தேவைகளும் அதிகரிக்கவே செய்கிறது. நிரந்தரக் கட்டடம் இல்லாதது பெருங் குறைபாடாகும். இந்தக் குறைபாட்டைப் போக்க ஆறு திருமுருகன் எமக்குக் கட்டடம் அமைப்பதற்கு வேண்டிய காணியை இலவசமாக வழங்கியுள்ளார். இதன் மூலம் எதிர்காலத்தில் மேலும் பல புதிய புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

ஏற்புரை வழங்கிய ஆறு.திருமுருகன்

இனிமையான பேச்சு, உறுதியான எழுத்து, வலுவான செயற்பாடு இவற்றை உலகம் மதிக்கிறது. முதன் முதலில் இந்தியாவில் பித்துக்குளி முருகதாஸ் நிகழ்வில் பங்குபற்றியிருந்தேன். அப்போது அங்கு நிறையப் பணம் கிடைத்தது. அதனைப் பொதுப்பணிக்கே செலவிட்டேன். அதன்பின் பல வெளிநாட்டு சொற்பொழிவுகளில் கிடைத்த பணத்தைப் பல தரும செயல்களுக்குப் பங்கிட்டுவருகிறேன்.

எமது நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டில் வசிப்பவர்கள் இன்றும் இங்குள்ள தமது உறவுகளுக்குத் தாம் எவ்வாறு உதவலாம் என்று என்னிடம் கேட்கிறார்கள். ஆனால் எமது நாட்டிலுள்ள பணம் படைத்த கல்விச் சமூகம், ஏன் ஏழை மாணவர்களுக்கு கல்விக்காக உதவ முன்வரக்கூடாது? கஷ்டப்பட்ட ஏழை மாணவர்களுக்கு எவரும் உதவி புரிய முன்வருவ தில்லை எனத் தெரிவித்தார். (101)

# கோண்டாவில் கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமாக மதுவிற்பனை!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் அண்மைக் காலமாக சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனை அதிகரித்து வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வர்த்தக நிலையம் ஒன்றைப் பயன்படுத்திக்கொண்டு – சாராயம், கசிப்பு போன்றவற்றை விற்பனை செய்வதோடு, அங்கிருந்து மது அருந்துவோர் தகாத வார்த்தைகளை பிரயோகித்து, தகாத முறையிலும் நடப்பதாகக் கூறப்படுகிறது.

கோண்டாவில் பகுதிக்கென அரச அனுமதி பெற்ற மதுபான விற்பனை நிலையமொன்று இயங்கி வருகின்ற போதிலும், அப் பகுதியில் சட்டவிரோத மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தப் பகுதியில் சுமார் தனியார் கல்வி நிலையம் ஒன்றும், சனசமூக நிலைய முன்பள்ளியும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (82)

# சனசமூக நிலைய நன்கொடைக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டுகோள்!

2004 ஆம் ஆண்டு நன்கொடைக்கு விண்ணப்பிக்காத வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபைக்கு தமது கணக்கறிக்கை, கூட்ட அறிக்கை, வங்கிப் புத்தகம் என்பவற்றுடன் வந்து நன்கொடைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறித்த திகதிக்குள் நன்கொடை விண்ணப்பத்தைப் பெறாத பட்சத்தில், அவர்களுக்கான நன்கொடைகள் இரத்துச்செய்யப்படும் என, வலி.தென்மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ் அறிவித்துள்ளார்.

இந்தப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 76 சனசமூக நிலையங்கள் இயங்கிவருகின்ற போதும், இதுவரை 50 சனசமூக நிலையங்களே நன்கொடைக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலைதீவு அந்தோனியார் ஆலய நவநாள் கொண்டாட்டம் சனியன்று!

வரலாற்றுப் புகழ் பெற்ற பாலைதீவு அந்தோனியார் ஆலய நவநாள் கொண்டாட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கவுள்ளது.

அன்று மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனைகள் இடம் பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல், கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெற்று, சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டம் நிறைவடையும்.

இந்த வருடம் பாலை தீவுக்குச் செல்லும் யாத்திரிகள் குருநகர் இறங்கு துறை ஊடாக மட்டுமே அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கத்தில் விநியோகிக்கும் பத்திரத்தை நிரப்பி வழங்குவதன் மூலம் அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாத்திரிகர்கள் தமது அன்றாடத் தேவைக்கான உணவு மற்றும் தண்ணீர் வசதிகளையும் எடுத்து வரவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாலைதீவு அந்தோனியார் ஆலயப் பகுதியில் கடந்த காலங்களில் யாத்திரிகர்கள் தங்கு மடமாக இருந்த கட்டடங்கள் சேதமடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாலைதீவைத் தமது தொழில்க்களமாகக்கொண்ட குருநகர் மீனவர்களால் நேர்த்திக் கடனாக அமைத்துக் கொடுக்கப்பட்ட இந்த கட்டடங்களின் மரங்கள் பழுதடைந்ததையடுத்து பங்குத் தந்தையால் ஓடுகள் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மண்டபங்கள் மீளவும் நிறுவப்படும் வரையில், யாத்திரிகர்கள் தற்காலிக கூடாரங்களை எடுத்துச் செல்வதும் முக்கியமென அறிவிக்கப்பட்டுள்ளது. (206)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(மானிப்பாய்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் வாணர் விளையாட்டுமைதானத்தில் கல்லூரியின் அதிபர் எஸ். கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (100)

## மகனை காணவில்லையென முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நலன்புரி நிலையத்தில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் இலந்தையடி நலன்புரி முகாமில் வசித்து வரும் நடராஜா நிமலராஜன் (வயது 18) என்ற இளைஞரே காணாமற் போனவராவார். இவர் கடந்த 24 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டதாகவும், இன்னமும் வீடு திரும்பவில்லை எனவும் இவரது தாயரின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, யழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடத்திய எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு காட்சி.

# திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பம் கோரல்!

(சுதுமலை)

1979 ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 108 ஆம் பிரிவின் கீழ் (திடீர்) மரண விசாரணை அதிகாரிகள் நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருக்கவேண்டும். நியமனப் பிரதேசத்தில் கடந்த இரண்டு வருடம் வசித்திருத்தல் வேண்டும். 30 – 58 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். க.பொ.த. சாதாரன தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன், சிங்களம்/தமிழ்மொழி, கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உட்பட ஓர் அமர்வில் 5 பாடங்களுக்குக்குறையாமல்சித்தியடைந்து, இரு அமர்வுகளில் 6 படங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் – யாழ்ப்பாணம், சன்டிலிப்பாய், வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி), வல்வை கிழக்கு, கோப்பாய், நெடுந்தீவு, வலிகாமம் தெற்கு (உடுவில்) ஆகிய பிரதேச செயளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு, கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 29.04.2005 இற்கு முன்னதாக செயலாளர் நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சு, கொழும்பு 12 எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (44)

# இசைக் கருவிகளின் இலவச வகுப்புகள்!

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகத்தினரால் வயலின், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகள் இலவசமாக பயிற்றுவிக்கப்படவுள்ளன.

நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்தே வயலின், மிருதங்கம் ஆகியன இலவசமாக பயிற்றுவிக்கப் படவுள்ளன. எனவே, மேற்படி இசைக் கருவிகளை பயில விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பு தமது பெயர்களை நாவலர் கலாசார மண்டபத்திலுள்ள அலுவலரிடம் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வயலின் ஆசிரியராக சாமி பத்மநாதனும், மிருதங்க ஆசிரியராக சின்னையா துரைராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# இருவேறு விபத்துக்களில் இரு மாணவிகள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மற்றும் கரவெட்டி பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இருவேறு வீதிவிபத்துக்களில் சிக்கிய மாணவிகள் இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பகுதியில் இடம் பெற்றவிபத்தில் யா.ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் – நிறோஜினி (வயது 18) என்பவரும், கரவெட்டிப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவி இரத்தினேஸ்வரன் – நளினா (வயது 6) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

நேற்றுமுன்தினம் காலை சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தவேளை, சுன்னாகம் சந்தியைக் கடக்க முற்பட்டபோது, காங்கேசன்துறைப் பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி காய மடைந்தார்.

நேற்றுமுன்தினம் பாடசாலை முடிவடைந்து, வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை, பின்னால் வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவி படுகாய மடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



HAPPY BIRTHDAY

பெயர் : உ.கஜிதா
முகவரி : உயரப்புலம்.

இரண்டாவது அகவையில்



HAPPY BIRTHDAY

பெயர் : இ.ஷாருண்யா
முகவரி : கனடா.

ஐந்தாவது அகவையில்



HAPPY BIRTHDAY

பெயர் : அ.காருக்ஷி
முகவரி : அரியாலை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.






# குறைந்த செலவில் அதிக இலாபம் தரும் பாக்கு

பாக்கு, பொருளாதார ரீதியாக பெறுமதி வாய்ந்த பயிராகும். சிலர் வீட்டுத் தோட்டங்களில், தோட்டப் பயிர்களின் இடையே பாக்கு மரத்தையும் கலந்து பயிரிடுகின்றனர். விவசாயிகள் பாக்குமரத்தைக் கலப்புப்பயிராகவோ அல்லது தனியாகவோ பயிரிட்டு, நல்ல பொருளாதார இலாபத்தைப் பெறமுடியும்.

பாக்கு விதைகளை உணவாக எடுத்துக் கொண்டாலும், இதற்கு மேலதிகமாக பாக்கு மரத்தின் அனைத்துப் பாகங்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது.

உள்ளூரில் பாக்கு மரம், பாக்கு விதைகளின் நிறம், அமைப்பு, அளவு போன்றவற்றால் வேறுபடுத்தப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்தும் பாக்கு விதைகள் இறக்குமதி செய்யப்படுகின்றது.

பாக்கொன்றை முளைக்க வைத்து, 6-7 ஆண்டுகளின் பின்னர் பாக்கு மரம் பயன்தர ஆரம்பிக்கும். மரம் வளரும் போது, படிப்படியாக விளைச்சல் அதிகரிக்கும். பாக்கு மரம் முளைத்து 30 வருடங்களின் பின்னர் விளைச்சல் குறைய ஆரம்பிக்கும்.

வருடத்துக்கு 175 - 200 சென்றி மீற்றர் வரையிலான மழை வீழ்ச்சி தேவைப்படும். அதேநேரம் வருடத்துக்கு 15°c - 38°c வரையிலான வெப்பநிலை உள்ள பிரதேசங்கள் பாக்குப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு உகந்தது. நன்றாக நீர் உறிஞ்சக் கூடிய களிமண் கலந்த மண் சிறப்பானது. மண்ணில் தொடர்ச்சியாக ஈரத்தன்மை இருத்தல் வேண்டும்.

பாக்கு விதையை முளைக்கவைத்து முதல் 2-3 வருடங்களுக்கு நிழலை வழங்குவது அவசியமாகும். பின்னர் நிழல் இல்லாத நிலையில் நல்ல விளைச்சலைத் தரும்.

முளைக்க வைப்பதற்காகப் பாக்கு விதைகளைத் தெரிவு செய்யும்போது, அவதானமாக இருக்க வேண்டும். உயர்ந்த பண்புகளைக் கொண்ட தாய்மரங்களிலிருந்து பெற்றுக் கொண்ட விதைகளையே முளைக்க வைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். இது மிக முக்கியமாகும். இதன் மூலம் சிறப்பம்சங்களுடைய அதிக விளைச்சலைத் தரக் கூடிய பாக்குகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

### நடுகை

நன்றாக பழுத்த பாக்கு - 2.5x2.5 சென்றி மீற்றர் இடைவெளிகளுக்குள் இருக்கும் வண்ணம், காயின் காம்புப் பகுதி மேல் நோக்கி இருக்குமாறு முளைக்க வைத்து மண்ணால் மூடிவிட வேண்டும்.

மூன்று மாதங்களின் பின்னர் காபனிக் உரமும், வெளிமண்ணும் கலந்து தயாரிக்கப்பட்ட இடத்தில், 30x30 சென்றி மீற்றர் இடைவெளிக்குள் முளைக்க வைக்க வேண்டும்.

விளைச்சலை பலவிதமாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது -

* பச்சைப் பாக்கு
* வெய்யிலில் காயவைத்த பாக்கு
* முற்றாத பாக்குகளை வெட்டி காய வைத்துப் பெறப்பட்ட பாக்கு.

பாக்குக்கு எப்போதும் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது.

தனித் தோட்டமாகப் பயிரிடாவிட்டாலும், கலந்து பயிரிட்டு இலாபத்தை விவசாயிகள் பெற முடியும்.

சசி சந்திரகாசன்

# தாவர இனவிருத்தியில் புதிய நுட்பங்கள்





மரபு முறையான (வழக்கத்திலுள்ள) காய்கறிப் பயிர் இனவிருத்தி (Conventional vegetable breeding) நுட்பங்கள் (Techniques) பல உள்ளன. இந்த நுட்பங்கள் அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தாவரவிருத்தி வித்தகர்களால் மிகவும் கவனத்துடனும் ஒழுங்குமுறையாகக் கையாளப்படுகின்றன. தாவர அல்லது பயிர் இனவிருத்திச் செயற்பாட்டின் முக்கிய நோக்கம் அறுவடை செய்யும் பயிர்களில் விளைச்சல் (Yield) தரம் (Quality) என்பவற்றை அதிகரிக்கச் செய்தலாகும். தாவரத்தின் அமைப்பும் (Plant architecture) பருமனும் (Size) அதன் விளைச்சலில் ஆட்சி செலுத்துகின்றன. தாவரமானது - நோய் பீடைத் தாக்கங்களுக்குச் சிறந்த எதிர்பார்ப்பைக் கொண்டிருக்குமானால், அவை பொருளாதார ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பல்வேறு தாக்கங்களுக்குச் சகதிப்புத் தன்மையை விருத்தியாக்க மேற்கொள்ளப்படும் இனவிருத்திச் செயற்பாடு, ஒரு முக்கியமானதாகும். இவ்வாறான எல்லா இயல்புகளையும் (Characters) தாவர விருத்தி வித்தகர்கள் கருத்திற்கொண்டு செயற்படுவார்கள்.

தாவர இனவிருத்தியில், உள்ளடக்கிய தாவரங்கள் இரு வகைப்படும். அவையாவன;-

இயற்கையான, உள்விருத்தியானவையும் (Inbreeders), வெளிவிருத்தி மூலமாக இனம் பெருக்குபவைகளும் (Outbreeders) ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் பயிர், தன் மகரந்தச் சேர்க்கையுடைதாயின் (உதாரணம் - நெல், தக்காளி, வெண்டி, அவரை) மேற்கொள்ளப்படும் இனவிருத்தி முறையானது - அயன் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் பயிரிலிருந்து, (உதாரணம் - சோளம், வெங்காயம், கரட்) வேறுபடும்.

அவை பற்றிய விபரங்கள் இந்தக் கட்டுரையின் ஆசிரியர் கலாநிதி அருள்நந்தி, வெளியிட்ட 'காய் கறிப்பயிர் இனவிருத்தி' எனும் நூலில் தரப்பட்டுள்ளன. இவை அறிவு பூர்வமான செயல்முறை நுட்பங்களாகும்.

பல வகையான சோதனை நடவடிக்கைகள், கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் தேர்வுகள், நீண்டகால நோக்கில் ஒரு புதிய இனத்தை உருவாக்கத் தேவைப்படுபவையாகும்.

தரமான தாவர இனவிருத்திச் செயல்முறையானது - செயற்கையான கலையுடன் கூடியதும், விஞ்ஞான ரீதியிலுமான ஒரு செயற்பாடாகும். உதாரணமாக - ஒரு காலப்பயிரான தக்காளியை எடுத்துக்கொண்டால், அதில் நடவடிக்கைகளும் நிறைவேற, நம் நாட்டில் குறைந்தது ஆறு வருடங்களாவது தேவைப்படும்.

இவ்வாறான நிலையில் காலத் தைக் குறைக்கவும், தாவர இன விருத் தியைப் பலப்படுத்தவும் பல புதிய நுட்பங்கள் (Innovative Technologies) அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

அவையாவன;

❖ ஒரு மடியம் இனவிருத்தி (Haploid breeding).

❖ கலம் கலப்புப் பிறப்பாக்கம் (Somatic Hybridisation).

❖ இழைய விருத்தி (Tissueue Culture)

❖ பரம்பரை அலகு மாற்றுகை (Genetic Engineering)

இந்தப் புதிய உயிர்த் தொழில் நுட்பங்களை (Biotechnology) ஒழுங்கான முறையில் மிகவும் கவனத்துடன் செயல்படுத்தல் அவசியம்.

இவைகளை மரபு முறையான இனவிருத்தி நுட்பங்களுடன் ஒன்றிணைத்துச் செயற்படுத்தினால் எமது நோக்கு துரிதமான பாரிய வெற்றியை அடையும் என்பது நிச்சயம்.

ஆனால் இந் தப் புதிய உயிர் தொழில் நுட்பங்களை தவழும் குழந்தையின் நிலைக்கே ஒப் பிடலாம்.


அத்துடன் இவைகளில் பல இன் னும் பரிசோதனை நிலையில்தான் உள் ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இழையவளர்ப்பு, பிறப்புரிமைப் பொறியியல் நுட்பங்களைப் பிரயோகித்து புதிய தாவரங்களைப் பெறும் முயற்சியில் வெற்றியடைந்துள்ள அதேவேளை - மூன்றாம் உலக நாடுகளில் புதிய உயர்தொழில் நுட்பங்களை நடைமுறையில் பாவிப்பதற்குப் பல வரையறைகள் உள்ளன. ஏனெனில் இவைகளுக்குப் பெறுமதிமிக்க ஆய்வுகூட வசதிகளும் இன்றியமையாதன.

எவ்வாறாயினும், இத்தகைய தொழில் நுட்பங்கள் தாவர இனவிருத்தியில் முன்னேறிச் செல்லும் செயல்முறைகளுக்கு அத்தியாவசியமாகும்.

கலாநிதி – வை. அருள்நந்தி
பயிரியல் பேராசிரியர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.
தருவது:-
தகவல் தொடர்பு மையம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சங்கானை |
|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 30/= | 40/= | 30/= |
| வெண்டிக்காய் | 20/= | 10/= | 40/= | 15/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 55/= | 60/= | 60/= |
| கத்தரிக்காய் | 40/= | 55/= | 80/= | 40/= |
| பாகற்காய் | 30/= | 30/= | 60/= | 40/= |
| கரட் | 40/= | 40/= | 60/= | 50/= |
| பீற்றூட் | 25/= | 25/= | 40/= | 30/= |
| முருங்கைக்காய் | - | - | 240/= | - |
| வெங்காயம் | 35/= | 30/= | 30/= | 30/= |
| பச்சை மிளகாய் | 70/= | 80/= | 60/= | 80/= |



## தொழில்மலர்

# உழைப்பு எல்லாவற்றையும் வென்றுவிடும்

– ஹோமர் –

எல்லாப் பணித்துறைகளிலும் விடய மறிந்தவர்கள் இருப்பது நல்லது தான். ஆனால், இப்படிப்பட்டவர்கள் கிடைப்பது தான் அரிதாக இருக்கிறது. தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பெரும்பாலான பணியாளர்களிடம் இல்லாததுதான் இதற்குக் காரணம்.

எனவே பணியாளர்களை வேலைக்கமர்த்தி, நிறுவனத்தை நடத்துபவர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தம்மிடம் பணிபுரிபவர்கள் புத்தி சாலிகளாக, நன்கு விடயம் தெரிந்தவர்களாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அறிவை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

பல நிறுவனங்களில் பணியாளர்களுக்காக வாசிகசாலைகளும், நூலகங்களும் உள்ளன. ஆனால் வேலை நேரத்தில் அறிவுக் களஞ்சியமான இந்த இடங்களுக்கு பணியாட்கள் வந்து போவதற்கு விசேடமாக குறிப்பிட்ட நேரத்தை அவர்கள் ஒதுக்குவதில்லை. உணவுக்காக ஒதுக்கப்படும் குறிப்பிட்ட குறுகிய இடைவேளை இதற்குப் போதுமானது அல்ல.

இப்போது பல நிறுவனங்கள் தங்களிடம் பணி புரிபவர்களுக்குத் தமது தொழிற்சாலையிலேயே உணவு வழங்கி வருகின்றனர். நேரம் வீணாவதைத் தடுப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது. உணவு உண்டபின் இருக்கும் நேரத்தை அநாவசியமாகக் கதைத்து வீணடிப்பதிலேயே பணியாளர்கள் ஈடுபடுகின்றனர். எனவே வாசிகசாலைஅல்லது நூலகத்துக்குச் சென்று, புத்தங்களைப் பயன்படுத்திக்கொள்ள தனியாக ஒரு இடைவேளை ஒதுக்கப்பட்டால், அவர்கள் தம் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.


ஒவ்வோர் ஆண்டும் விடுமுறையில் பணியாளர்கள் பல இடங்களுக்குச் சென்று வர ஊக்குவிக்க வேண்டும். செலவின் ஒரு பகுதியை நிறுவனமே ஏற்றுக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளுக்குச் சென்று வரவும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். நமது நாட்டைப் பற்றி மட்டுமன்றி, நாம் வசிக்கும் நகரத்தைப் பற்றிக்கூட அக்கறை காட்டாத பணியாளர்கள் நம்மிடையே பலர் இருக்கிறார்கள்.

**நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் புத்திசாலிகளாக, நன்கு விடயம் தெரிந்தவர்களாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். அறிவை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.**

வேலை நேரத்தில் அலுப்புத் தட்டாமல் இருக்கவும், உணர்வு நரம்புகள் அமைதிப்படவும், மெல்லிய இசைத்தட்டுகள் ஒலிக்க வைப்பது மிகவும் பயனுள்ள ஒன்றாகும். இதனால், திறமை கூடுவதை ஐரோப்பிய நாடுகள் நன்கு உணர்ந்து, அதைப் பயன்படுத்தி வருகின்றன.

தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்குப் பல்வேறு இயந்திரங்களும், இயங்கும் விதம் குறித்து தெளிவான விளக்கங்களுடன் படம் வரைந்து காட்டுவது நல்ல பலனைத் தருவதாக அறியமுடிகிறது. அவர்களுடைய திறமையின்மையைப் போக்க இது பெரிதும் உதவுகிறது.

அறிவை வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் முதலீடு என்றுமே வீணாகாது. எந்த ஒரு நிறுவனத்திலும், திறமையை வளர்க்க இடைவிடாது முயற்சி செய்து வந்தால், அதனால் உண்டாகும் அதிகப்படி உற்பத்தி, மேலே சொன்ன செலவுகளைச் சமாளிப்பதற்கு உதவும்.



அலுவலகம் – மிக நல்ல முறையில் அழகாகவும், சீராகவும் இருப்பதும், திறமையான பணியாளர்களைக் கொண்டிருப்பதும் நல்ல பலனைத் தரும்.

நிறுவனத்துக்கு வருபவர்கள் கவரப்பட்டு, நல்ல கருத்தை வெளியே உருவாக்கிக் கொள்வார்கள்.

இடத்தை அடைத் துக் கொண்டு, பெரிய பெரிய மேசை கதிரைகளைப் போட்டு அலுவலகத்தின் தோற்றத்தை வைப்பது வேலைத்திறமையைப் பாதிக்கும். அதே போல, நல்ல ஒளி நிலவும் இடமாகவும், அலுவலகம் இருக்க வேண்டும். அங்கு வேலை செய்வதை ஊழியர்கள் இன்ப அனுபவமாகக் கருதவேண்டும்.

நிறுனத்தில் பணி புரிபவர்கள் புத்தி சாலிகளாக நன்கு விடயம் தெரிந்தவர்களாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

அறிவை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.


## சுயதொழில்

# தக்காளிக்குழம்பு தயாரித்தல்

## (TOMSTO SAUCE)

வட- கிழக்குப் பிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே பெருமளவு தக்காளி பயிரிடப்படுகிறது.

பெப்ரவரி, மார்ச், ஒகஸ்ட் மாதங்களில் தக்காளி அறுவடை செய்யப்படுகிறது. இந்தக் காலங்களில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இவை மிக மலிவாகக் கிடைக்கின்றன. இந்தக் காலப்பகுதிகளில் தக்காளிக் குழம்பு தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ளலாம். வீடுகளில் ஓர் உப தொழிலாகவும் இதனை மேற்கொள்ள முடியும்.



நகர்ப் புறங்களிலுள்ள நடுத்தர வகுப்பு மக்கள், தக்காளிக் குழம்பை (தக்காளி சோஸ்) பெருமளவில் பயன்படுத்துகின்றனர். பெரிய நடுத்தர ஹோட்டல்கள், உணவு விடுதிகளில் தக்காளிக் குழம்புக்கான கிராக்கி அதிகமுண்டு. தக்காளிக் குழம்பின் உற்பத்தயில் கணிசமான பகுதியை உள்ளூரில் பயன்படுத் துவதுடன், ஒரு பகுதியை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும். எனவே இதற்கு நிலையான சந்தை வாய்ப்பு உண்டு.

இந்தத் துறையில் சிறிது காலப் பயிற்சியுடன் தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பத் தரத்துக்கேற்ப பொருளுக்கான கிராக்கி அதிகரிக்குமாகையால், தொழில்நுட்பத் திறனை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

தக்காளிக் குழம்பு தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்கள் - தக்காளிப் பழம், சீனி, வினாகிரி, வெள்ளைப் பூடு, இஞ்சி, மிளகாய்த்தூள், உப்பு.

**தக்காளிக் குழம்பு செய்முறை அட்டவணை**

தக்காளிப் பழங்கள்
↓
கழுவுதல்
↓
5 நிமிடங்கள் சூடாக்கல்
↓
மேற்தோலை உரித்தெடுத்தல்
↓
பிசைந்தெடுத்தல்
↓
வடித்து விதையை அகற்றல்
↓
சூடாக்கல்
↓
சீனி → கலத்தல் ← { வினாகிரி, வாசனைச் சரக்குகள் }
↓
களிம்பாகும் வரை கொதிக்க வைத்தல்
↓
போத்தல்களில் ஊற்றுதல்
↓
சீல் வைத்தல்
↓
களஞ்சியப்படுத்தல்

உபகரணங்கள் - ஆர் ஓ பி.பி சீலில் மெஷன் 01, பெரிய சோர்ஸ்பான்கள் 02, வடி 01, வாயு அடுப்பும், வாயு சிலிண்டரும் (சாதாரண அடுப்பும் பயன்படுத்தலாம்) கரண்டிகள் 05, துப்பரவு செய்யப்பட்ட போத்தல்கள்.

அறுவடைக் காலங்களில் தக்காளி மிக மலிவாகக் கிடைக்குமாகையால், இந்தக் காலத்தில் உற்பத்தியை அதிகரித்து, களஞ்சியப்படுத்தலாம். விலை உயரும் காலத்தில் இவற்றைச் சந்தைப்படுத்தலாம். தக்காளி கிடைக்காத காலங்களில் - மிளகாய், சோயா, அவரை, பூசணி, கோவா, வெங்காயம், கரட் ஆகிய மரக்கறிகளிலிருந்தும் அந்தந்த மரக்கறிக் குழம்புகளைத் தயாரிக்கலாம்.

**தக்காளிக்குழம்பு செய்முறை** -

நன்கு பழுத்த தக்காளிப் பழங்களைத் தெரிந்தெடுத்து, கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். இவற்றைப் பாத்திரம் ஒன்றில் இட்டு 5 நிமிடங்கள் சூடாக்க வேண்டும். பின்னர் பழங்களின் மேல் தோலை உரித்தெடுத்து அவற்றைப் பிசைதல் வேண்டும். இதைப் பின்னர் பிளாஸ்ரிக் வடியினால் வடித்து விதைகளை வேறாக்க வேண்டும்.

எடுக்கப்பட்ட சாறு கொதிக்க வைக்கப்படுகையில்- சீனி, வினாகிரி ஆகியனவும் இஞ்சி, கறுவா, உள்ளி, கராம்பு ஆகியவற்றின் தூளும் சேர்க்கப்பட வேண்டும். கலவை களிப்பாக வரும்போது, அதனை அளவான போத்தல்களில் வார்த்து இறுக மூடி, சீல் வைத்தல் வேண்டும்.

# சிறப்பம்சங்கள் கூடிய மதர்போட்ஸ்

ஓசைப்படாமல் நுழைந்துகொண்டிருக்கும் புதிய தொழில்நுட்ப மாறுதலுக்கு ஏற்ப கணினித் தொழில்நுட்பமும் மாறிக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ப புதிய தொழில்நுட்பங்களுடன் கணினிகளை அறிமுகப்படுத்துவதில் கணினித் தயாரிப்பில் முன்னோடியாகவுள்ள கம்பனிகளுக்கிடையே பெரும் போட்டி நிலவுகிறது.

கணினியின் மிக முக்கியமான பகுதியில் ஒன்று Mother Board இது எல்லா வகையான பகுதிகளையும் தொடுப்பதற்குப் பயன்படுத்தப்படுவதோடு, தனது தொழிற்பாடான தகவல் பரிமாற்றம், கணினியைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறான Mother Board களை பல புதிய தொழில்நுட்பங்களுடன் உருவாக்கி வழங்குவதில் இன்று தகவல் தொழில் நுட்பத்துறையில் முன்னிலையிலுள்ள Mercury நிறுவனம் திகழ்கிறது.

Mercury Company தற்போது வாடிக்கையாளர்களுக்காக P1865GRM-L, P1865GM-L, P1845GLM-AGP போன்ற புதிய Mother Board களை 3 வருட உத்தரவாதத்துடனும், சிறப்பான விலைக்கழிவுடனும் அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வாறு அறிமுகமாகியுள்ள Mercury Mother Board Intel - P4, Celeron Processor Support உடையவை. Prescott மற்றும் Hyperthreading தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவை AMD - Duron, Athlon, Sempron Processor தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்த Mother Board / 400/533/800 MHZ FSB, 333/400 Mhz DDR Support, 32/64 MB on Board VGA, 2 MB Flash Bios உடையவை. அத்துடன் இவற்றின் விசேட சிறப்பம்சமாக Intel/VIA/SIS / Chipsets, 6 Channel Audio மற்றும் SATA/CNR/USB Connectors காணப்படுகிறது.

இவ்வாறான சிறப்பம்சங்களுடன் கூடிய Mother Board களை அறி முகமாக்கியுள்ள Mercury கம்பனியானது இலங்கை முழுவதிலும் பரந்த 256 முகவர் சந்தை நிலையங்களில் பாராமரிப்பும், விற்பனை சேவையையும் கிட்டத்தட்ட 10 வருடங்களாக வழங்கிக்கொண்டிருக்கிறது.

Mercury Mother Board ஆனது இன்று ஆசிய பசுபிக்கில் 70% சந்தை வீதாசாரத்தைக்கொண்டுள்ளது.

அது மட்டுமன்றி இந்தியாவில் விற்பனையாகும் Mother Board வகைகளில் முதலாவதாகவும் காணப்படுகிறது.

இவ்வாறான தொழில்நுட்பத்துடன் அறிமுகமாகியுள்ள Mother Board களை உத்தரவாதத்துடனும், விற்பனையின் பிந்திய சேவையை வழங்குவதில் இலங்கையில் நாடளாவிய ரீதியில் MICRO PC SYSTEMS இன் கிளைகள் அனைத்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

# தேசியத் தலைவரின் நீண்டகால நோக்காகவே தமிழீழ வைப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது!

## தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்



(பூநகரி)

தமிழீழ தேசியத் தலைவரின் நீண்டகால நோக்கிலேயே தமிழீழ வைப்பகம் உருவாக்கப்பட்ட தென தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் தமிழீழ வைப்பகத்தின் பதினோராவது கிளையை நேற்று முன்தினம் திறந்துவைத்து, பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– தனது பதினோராவது கிளையை கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் நிறுவியுள்ள தமிழீழ வைப்பகமானது, நீண்டகால நோக்காகவே தனது பணியை ஆற்றியிருக்கிறது, தொடர்ந்து சேவையாற்றவுள்ளது.

எமது மக்களுடைய எதிர்காலம் நீண்ட பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டு, தனது இந்தப் பணியைச் செயற்படுத்தி வருகிறது.

எமது மக்கள் பெரிதும் நன்மையைப் பெறவேண்டும் என்ற சிந்தனையோடு தனது பணியை தமிழர் தாயகம் எங்கும் மேற்கொள்ளவுள்ளது. அந்த அடிப்படையில் செயற்பட்டுவருகிறது.

பூநகரி பிரதேசமானது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். பண்டைய வரலாற்றிலும் சரி, தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றிலும் பல வரலாற்று உண்மைகளை தன்மீது சுமந்திருக்கிறது.

இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், எமது தேச விடுதலைப்போருக்கு அயராது உழைத்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள். பெரும் யுத்தத்திற்கு முகம் கொடுத்து இன்று கிடைத்துள்ள சிறிய ஓய்வுக்குப்பின் தமது வாழ்வை தொடர்ந்துள்ளனர்.

இரவு பகல் பாராது, நேரகாலம் பாராது உழைத்து தேசத்தை வளர்க்கின்றனர். இவர்களுடைய உழைப்பானது மக்களையும் தேசத்தையும் வளப்படுத்தவேண்டும்.

இந்த வைப்பகத்தின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தமது மக்களுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் ஒரு நன்மையாக அமைய வேண்டும். இந்த வைப்பகத்தின் மூலம் ஏற்படுத்தப்படவுள்ள அனைத்து நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் -03

1863 : அமெரிக்காவில் இராணுவப் பணிக்கு கட்டாயமாக ஆள் திரட்டும் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

1906 : காற்றடித்த ரயர் பொருத்தப்பட்ட உயர்ரக விமானத்தின் வெள்ளோட்டம்

918 : ரஷ்யா ஜேர்மனியுடன் லிட்டோ வெஸ்க் சமாதான உடன்படிக்கையைச் செய்ததன்பின் போரில் இருந்து விலகிக் கொண்டது.

* : துருக்கியில்சாம்ஸன்என்றஇடத்தில்இருந்தஆர்மீனியர்கள்அனைவரையும் முஸ்லிம்கள் படுகொலை செய்தனர். வரலாற்றில் இது சாம்ஸன் படுகொலை என குறிப்பிடப்படுகிறது.

1923 : அமெரிக்கரான ஹென்றி றொபின்சன் லூஸ் என்பவரும் பிரிட்டனின் ஹொட்டன் என்பவரும் இணைந்து நியூயோர்க்கிலிருந்து ரைம் பத்திரிகையின் முதலாவது இதழை வெளியிட்டனர்.

1945 : அரபு லீக் அமைப்பின் சட்ட திட்டங்கள் கையெழுத்திடப்பட்டன.

1969 : ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய கொன்கோட் விமானத்தின் வெள்ளோட்டம்.

1972 : வியாழன் கோளை ஆய்வு செய்வதற்காக பயோனியர் - 10 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. வியாழன் கோள் ஆய்வுக்காக அனுப்பப்பட்ட முதல் விண்கலம் இதுவாகும். 1973 டிசம்பர் 5 ஆம் திகதி இது வியாழன் அருகில் சென்று அதனைக் கடந்து 1983 ஜூனில் சூரியக் குடும்பத்து எல்லையைக் கடந்து சென்றுவிட்டது.

1978 : றொடிசியா தேசிய இனங்களிடையே அதிகாரப்பகிர்வு செய்வதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

1988 : போட்டோ றிகோவில் எரிசிமோ என்ற இடத்தில் இருக்கும் தொலை நோக்கி மூலம் ஒரு புதிய துடிக்கும் விண்மீன் கண்டு பிடிக்கப்பட்டது.

1993 : போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்க வாய் வழி மூலமான மருந்தைக் கண்டுபிடித்த போலந்து நாட்டவரான பிரபல விஞ்ஞானி அல்போட் ஸாபியா மரணமானார்.

1996 : மா மனிதர் சிரித்திரன் சுந்தர் இயற்கை எய்தினார். 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் தேசத்தில் சிரித்திரன் என்ற இலக்கிய நயம் வாய்ந்த இதழை இவர் வெளிக் கொணர்ந்தவராவார்.

தொகுப்பு - சந்துரு

# வீதிக் கடவைகள் அழிந்திருப்பதால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு

## பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.பி தென்னக்கோன்

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் வீதிக் கடவைகள் அழிந்திருப்பதனால், வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், இது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தபால் மூலம் நான்கு முறை தெரிவித்தும், இதுவரை இது சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.பி தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – அண்மை நாட்களாக வீதி விபத்துக்கள் குறைந்துள்ள போதும், முற்றாக வீதி விபத்துக்கள் இடம் பெறாமல் இருப்பதற்கு தாம் தற்போது தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதி மக்கள் நகர்ப்புறத்தின் சுற்று வட்டத்தின் ஊடாக வீதியைக் கடந்து செல்கின்றனர். அவர்களை அவ்வாறு செல்ல வேண்டாம் எனவும், வீதிக் கடவையினூடாகப் போகச் சொல்வதற்கும், வீதிக் கடவைகள் இல்லாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வர்ணம் வாங்க நிதிப்பற்றாக்குறை என்று தெரிவிப்பதாகவும், இதன் காரணத்தால் மக்களை ஒழுங்கான முறையில் வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு கோரமுடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழீழ வைப்பகக் கிளை பூநகரியில் திறந்துவைப்பு!

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் தமிழீழ வைப்பகத்தின் புதிய கிளை ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் திறப்புவிழா தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றினார்.

தமிழீழ வைப்பகக் கொடியை தமிழீழ மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து, தமிழீழ வைப்பகத்துக்கான பெயர்ப்பலகையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

வைப்பகக் கட்டடத்தை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்துவைத்ததுடன், வங்கியின் முதலாவது வாடிக்கையாளரின் கணக்கை தொடக்கி வைத்து முதன்மையுரையாற்றினார்.

தொடர்ந்து கருத்துரைகளை பூநகரி பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ் கந்தகுமார், பூநகரி மகாவித்தியால அதிபர் பொன்.தில்லைநாதன், நிதித்துறை வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன், தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பூநகரிப் பிரதேச மக்கள், வைப்பக வாடிக்கையாளர்கள், வழமைதாரர்கள், காவல்துறையினர். பிரதேச அரசியற்துறையினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை முல்லைத்தீவில் நடத்துமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தால் நடத்தப்படும் நடமாடும் சேவையை, முல்லைத்தீவு நகரில் நடத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமி அனர்த்தம் காரணமாகத் தமது முக்கிய ஆவணங்களான தேசிய அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்கள் என்பனவற்றை முல்லைத்தீவு நகர மக்களே அதிகம் இழந்துள்ளனர்.

தற்பொழுது முல்லைத்தீவு நகரப் பகுதியில் தற்காலிக குடியிருப்புகளில் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலும், முள்ளியவளைப் பிரதேசத்திலும், இந்த இடம் பெயர் சேவையை நடத்துவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களுக்குச் சென்று, இந்தப் பதிவுகளை மேற்கொள்ள முடியாது எனவும், பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகரப் பகுதிகளில் இந்த இடம் பெயர் சேவையை நடத்துமாறும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கலந்துரையாடல்

முல்லைத்தீவு – முள்ளியவளையில் பெண்களின் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு முள்ளியவளை அன்னையர் முன்னணிதலைவி கௌரிபுத்திரி தலைமையில் இடம் பெற்றது. இதில் எதிர்வரும் 8 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், கிராம மட்டத்தில் பெண்களின் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும், மகளிர் அமைப்புகளை வலுப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கருத்துரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி நிகழ்த்தினார்.

# முத்தரிப்புத்துறை கிராமத்தில் குடிநீருக்குப் பெரும்தட்டுப்பாடு

மன்னார் - முத்தரிப்புத்துறை கிராம மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


இந்த மாவட்டத்தின் பழம் பெருமைவாய்ந்த இந்தக் கிராமத்தில், 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கடற்றொழிலை பிரதான தொழிலாக மேற்கொண்டு வரும் இவர்கள், குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக வேறு இடங்களுக்குச்செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, இந்தப் பகுதிக்குக் குடிநீரை விநியோகிப்பதற்கு இந்தப் பகுதி அரச திணைக்களங்களோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ முன்வராது அசமந்தப் போக்கைக் காட்டிவருகின்றன.

## பாடக்குறிப்புப் புத்தகம் வழங்கல்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தமது கல்வியைத் தொடர முடியாது பெரும் சிரமங்களை எதிர் கொண்ட முல்லைத்தீவு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையில், யுனி செப் நிதியுதவியுடன் தமிழீழ மாணவர் அமைப்பினரால் பிரதிசெய்யப்பட்ட பாடக்குறிப்புப் புத்தகங்களை முல்லைத்தீவு மாவட்ட, மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் கடந்த திங்கட்கிழமை மாணவர்களிடம் வழங்கினார்.





நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட கிளிநொச்சி – பூநகரி தமிழீழ வைப்பகக் கிளையின் பெயர்ப் பலகையினை முதலாவது படத்திலும், வைப்பகக் கட்டடத்தை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்து வைத்து, வங்கியின் முதலாவது வாடிக்கையாளருக்கு கணக்கைத் தொடக்கி வைப்பதை இரண்டாவது, மூன்றாவது படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை

திருக்குறள்

# நமது நோக்கு

## கிழக்கு வன்முறைகளின் சூத்திரதாரிகள்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள், போராளிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் மீதான கொலை மற்றும் தாக்குதல் நடவடிக்கைகள் நாட்டின் அமைதிச் சூழலுக்கும், எதிர்கால சமாதான முயற்சிகளுக்கும் எத்தகைய ஆபத்தை விளைவிக்கப் போகின்றது என்பது மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளரான குவேனி உட்பட மூன்று பெண்போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி தொடர்பாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வே அரசுக்கு விடுத்துள்ள அறிக்கையின் மூலம் தெளிவாக உணரக் கூடியதாக உள்ளது.

படைத்தரப்பின் அனுசரணையுடனும், பின்புல ஆதரவுடனும் கிழக்கில் குறிப்பாக மட்டு - அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும், விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் இராணுவ உளவுப் பிரிவினரின் உளவியல் யுத்த நடவடிக்கைகளின் அங்கமேயாகும். இத்தகைய கொலைகள் மற்றும் தாக்குதல் நடவடிக்கைகள் கிழக்கின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதுடன் - அங்கு வாழும் மக்கள் மத்தியில் உளவியல் ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்தி அங்கு நிரந்தர அச்சமும், பீதியும் கலந்த மரணசூழலை உருவாக்குவதே சம்பந்தப்பட்ட கொலைஞர்களின் இலக்குமாகும்.

இத்தகைய அச்சமும் பீதியும் நிறைந்த சூழல் மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்தும், விடுதலைப்போராட்ட உணர்வுகளில் இருந்தும் அந்நியப்படுத்திவிடும் என்றே அரசும், படைத்தரப் பினரும் கணக்குப் போட்டு செயற்படுகின்றனர் என்பது உண்மையே.

மட்டு - அம்பாறை மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் மற்றும் இருவர் மீதான தாக்குதலை மேற்கொண்டவர்களில் ஒருவர் என கைது செய்யப்பட்டுள்ள நபர் அரசுடன் இணைந்து இயங்கும் ராஸிக்குழு என்ற கொலைக்கும்பலுடன் இயங்கி வந்தவர் என்றும் இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ராஸிக் என்ற மறைபெயர் கொண்ட, பல படுகொலைகள் - மற்றும் சமூக விரோதச் செயல்களின் சூத்திரதாரி சில வருடங்களின் முன்னர் கொல்லப்பட்டு விட்டாலும், அவரது தலைமையின் கீழ் இராணுவத்திற்கு துணைப்படையாக இயங்கிய சிறு கும்பலைச் சேர்ந்தவர்கள் இன்னமும் கிழக்கில் தொடர்ந்தும் புலிகளுக்கும், தமிழ்த்தேசிய சிந்தனையாளர்களுக்கும் அச்சுறுத்தலாக இயங்கிவருகிறார்கள் என்பதும் அனைவரும் அறிந்த விடயமேயாகும். இவர்களையும் ஏனைய ஆயுதந்தாங்கிய தமிழ்க் குழுக்களையும் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் ஆயுதப் படையினருடன் இணைந்து செயற்பட்டு வருவதும் உண்மையேயாகும்.

இவற்றையெல்லாம் அரசும் படைத்தரப்பும் தொடர்ந்து மறுத்து வந்தாலும், உண்மையை மறைக்கமுடியாது என்பதையே ராஸிக்குழுவைச் சேர்ந்த அந்த நபர் கைதான விடயம் நிரூபிப்பதாக உள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் ஆயுதபாணிகளாக சுதந்திரமாக நடமாடிய வண்ணம் கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் கிழக்கில் படுகொலைகள் பலவற்றைச் செய்த எவரும் இதுகாலவரை சரியாக கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் - அது குறித்து அரசு எந்தவிதமான அழுத்தமான செயற்பாட்டையும் மேற்கொள்ளவும் இல்லை என்பதும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தும் விடயங்களேயாகும்.

இந்தச் சந்தேகங்கள் அரசையும், ஆயுதப் படையினரையும் நோக்கிய சந்தேகங்களுக்கு வழிவகுப்பதும் தவிர்க்க முடியாததேயாகும்.

இந்த நிலையில் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்றினை அமைக்க ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை நகைப்பூட்டும் விடயமாகும்.

இந்த ஆணைக்குழு கிழக்கில் நடந்த சம்பவங்கள் குறித்து விசாரிப்பதுடன் அவற்றிற்கான காரணிகள், நோக்கங்கள் குறித்தும் விசாரிக்கவுள்ளதாம். விசாரணை முடிவில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாம்.

எப்படி இருக்கிறது பாருங்கள்!

கிழக்கின் படுகொலை மற்றும் தாக்குதல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டோர் யாரென்பதும் அதற்குரிய காரணிகள் எதுவென்பதும், அதற்கான நோக்கம் என்ன என்பதும் அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ ஆணைக்குழு விசாரணை நடத்தித்தான் அறிய வேண்டிய விடயமல்ல.

இவை எல்லோருக்கும் பகிரங்கமானவைகளே.


ஜனாதிபதி ஆணைக்குழு, விசாரணை, அறிக்கை நடவடிக்கை என்பதெல்லாம் வெறும் சம்பிரதாயபூர்வ காலம்கடத்தும் விடயங்களேயாகும்.

இத்தகைய விசாரணைகளும், ஆய்வுகளும் கடந்த காலங்களில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக நடத்தப்பட்டும் அவை குறித்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டும் கூட, அவற்றிற்கு என்ன நடந்தது என்பது தெரியாமலே அவர்கள் கிடப்பில் போடப்பட்டு மறந்துபோன விடயமாகிப்போனது நாமறிந்த விடயமேயாகும்.

இந்த நிலையில் புலிகளை வேண்டுமென்றே சீண்டுவோரும் அதற்குப் பின்னணியில் இருப்போரும், இந்த நாட்டை பேரழிவுக்கு இட்டுச் செல்லும் நாசகாரச் செயலுக்கு வழிவகுப்பவர்களாகவே இருப்பர்.

அவர்கள் யார் என்பது ஆண்டவனுக்கு மட்டுமல்ல ஆள்பவனுக்கும் தெரிந்தே இருக்கும் என்பதே உண்மையுமாகும்.

# நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

## பத்தோடு பதினொன்று அத்தோடு விசாரணைக்குழுவும் ஒன்றா?

ஓலமிடும் குழந்தையின் குரலை அடக்குவதற்கு வாய்க்குள் மிட்டாயை அல்லது கொழுக்கட்டையைத் திணித்து சமாளிப்பது சில தாய்மார்களின் சாதுரியம். நாட்டில் தொழிலாளர் தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் கதவடைப்பு என்று பிரச்சினைகள் வளர்ந்தால் விசாரணைக்குழு நியமித்து நிலைமையைச் சமாளிப்பதும் காலங் கடத்துவதும் நமது நாட்டிலும் பின்பற்றப்பட்டு வரும் ஒரு நடைமுறை.

இதே போல் சில குழுக்களுக்கும் இடையில் அல்லது மாணவர்களுக்கிடையில் கைகலப்பு கலகம் என்று ஏற்படும் போது பொலிசார் அவற்றை அடக்க தடியடிப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்று நிலைமை மோசமாகிவிடுவதுமுண்டு. இது அரசாங்கத்துக்கு எதிராகப் பெரும் பிரச்சனையாக மாறுவதும் உண்டு. இந்தச் சமயங்களில் நிலைமையைச் சமாளிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதிகளைக கொண்ட விசாரணைக்குழுக்களை நியமித்தும் சமாளிப்பதும் வழக்கம். இது நமது நாட்டில் மட்டுமல்ல வேறுபல நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருவது ஒரு சம்பிரதாயமாகவே இருந்து வருகிறது.

நமது நாட்டில் 1974ஆம் ஆண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு அன்று ஆட்சியிலிருந்த சந்திரிகா அம்மையாரின் அம்மா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு பேரினவாதிகளினதும் நம்மவர் சிலரினதும் தூண்டுதலால் முட்டுக்கட்டை போட்டது.

பத்துத்தினங்கள் நடந்த இந்த மாநாட்டை தமிழ் மக்கள் யாழ்ப்பாணமே விழாக்கோலம் கொண்டது போல் பெரும் இந்திரவிழாவாகக் கொண்டாடினர். இதனால் ஆத்திரமுற்ற காவல்துறையிலிருந்த சிங்களப் பேரினவாதிகள் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சிகளில் குழப்பம் செய்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி ஒன்பது அப்பாவித் தமிழ் உயிர்களைப் பலியெடுத்தனர். இதன் பின் இந்தச் சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணைக் கமிசனை நியமித்து உண்மையை அறிய வேண்டுமென்றும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கை அரசின் காதில் விழவே இல்லை நாடாளுமன்றத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது இலங்கைத்தமிழரசுக் கட்சிப் பிரதி நிதிகளும், எதிர் கட்சிகளும் சேர்ந்து தமிழாராய்ச்சி மாநாட்டுக் கொலைகள் பற்றி பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷனை நியமித்து விசாரிக்க கோரி தனியார் பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர்.

பின்னர் ஜே.ஆர் பிரதம ராகி தொடர்ந்து ஜனாதிபதியாக வந்ததும்கூட அந்த கொலைகள் பற்றி விசாரணை நடைபெற்றதேயில்லை. தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்கள் சார்பில் ஓய்வுபெற்ற நீதியரசர் ஓ.எல்.டி கிரெட்சா தலைமையில் ஒரு சுயாதீன விசாரணைக் குழு நியமித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்தனர். அதை யாரும் கணக்கிலும் எடுக்கவில்லை இது பெரும்பான்மை ஜனநாயகம்.

1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கெதிராக நடந்த இனக்கலவரம் பற்றி விசாரிக்கவும் ஆணைக்குழு நியமிக்க தமிழர்கள் கோரினர். அது யார் காதிலும் சர்வதேச சமுகத்தின் காதிலும் விழவில்லை 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரியில் நடந்த கண்காட்சியில் காவல்துறைக் காடையர்களால் தொடங்கி வைக்கப்பட்டு நாடு முழுவதும் பரவிய இனக்கலகம் பற்றி பலமான வற்புறுத்தலின் பின் ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.ஸி. சன்சோனி ஒரு நபர் விசாரணை ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

குறிக்கப்பட்ட கால எல்லைகள் நீடிக்கப்பட்டுப் பலமாத காலங்களுள் பல நகரங்களிலும் விசாரணை நடைபெற்று பல சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு இறுதியில் ஆணையாளர் சமர்ப் பித்த அறிக்கை இன்று வரை வெளிவரவேயில்லை. சிபார்சுகள் செயல்படுத்தப்படவும் இல்லை. இந்த விசாரணைக்காகக் செலவிட்ட பணமும் நேரமும் வீணானது! 1983 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் தமிழ் மக்களுக்கெதிராக நடந்த இனக்கலகம் பற்றியும் எந்த ஆணைக்குழுவும் விசாரணை செய்ததில்லை.

இலங்கையில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுப் போர் நிறுத்தத்தையும் இரு தரப்பும் கடந்த மூன்று வருடங்களாகக் கடைப்பிடித்து வருகின்றன. அரச படைகளைச் சோர்ந்தவர்களும் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் தங்களின் பொறுமையைக் கடுமையாகக் சோதித்து வருவதாகவும், பொறுமையின் விளிம்புக்கே தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருக் கின்றார்கள் என்பது தமிழீழ தேசியத் தலைவர் கடந்த நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தின உரையின் போது சர்வதேச நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

போரினால் பாதிக்கப்பட்டு அவல நிலையில் நிற்கும் மக்களுக்குப் புனர்வாழ்வும் புனரமைப்பும் அளிக்கவேண்டியது முதலில் நிறைவேற்றிய கடமையாகும். சமாதான முயற்சிகள் நிரந்தர சமாதானப் பேச்சுப் பற்றியெல்லாம் பின்னர் பார்க்கலாம் முதலில் உடனடி உதவிக்கு இடைக்கால தன்னாதிக்க அதிகார சபையே வேண்டும் என்று விடுதலைப்புலிகள் கோரி அதற்கான வரைபுத் திட்டமொன்றையும் சமர்ப்பித்து சுமார் ஓராண்டாகிறது. இது பற்றி ஆளுங்கட்சிக்குள் இன்னமும் இழுபறி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கடந்த டிசம்பர் 26ஆம் திகதி திடீரென ஏற்பட்ட கடற்கோள் வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் பெரும் அழிவை ஏற்படுத்தியிருக் கிறது. வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் போரினாலும் பின்னர் கடற்கோளினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வும் புனரமைப்பும் இன்னும் ஒழுங்காகக் கிடைக்க வில்லை. அகதிமுகாம்களிலும் கூடாரங்களிலும் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவலத்தில் உழலும் மக்களுக்குப் புனர்வாழ்வு கிடைக்காத நிலையில் கிழக்கில் மட்டக்களப்பு பகுதியில் மீண்டும் கொலைச் சம்பவங்கள் தலை தூக்கியுள்ளமை மக்களுக்குப் பெரும் கவலையைக் கொடுத்துள்ளது. மட்டக்களப்பு - அம்பாறை விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் இரு சகபோராளிகள் வவுனியாவிலிருந்து மட்டக்களப்பிற்குத் திரும்பி வரும் வழியில் வழி மறித்துக் கொல்லப்பட்டனர். முன்னாள் எம்.பி அரியநாயகம் சந்திரநேருவும் இதில் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கும் திறன் இலங்கைக் காவல்துறைக்கும் புலனாய்வுப் பிரிவுக்கும் இல்லை இந்த நிலையில் அக்கரைப்பற்றுப் பகுதியில் நிராயுதபாணிகளான பெண் போராளிகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளனர். இந்த நிலையில் இந்தச் சம்பவங்கள் பற்றி ஆராய விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். காவற்துறைக்கும் புலனாய்வுத் துறைக்கும் திறன் இல்லை விசாரணைக்குழு யார் வாயை அடக்குவதற்கு? யாரை ஏமாற்றுவதற்கு? பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்றா?

# வாசகர் நோக்கு

## இந்தச் சுமை தேவையா?

யாழ். மாவட்டத்தில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு பாடசாலைகளில் அவர்களின் வயதுக்கு மீறியதான கல்விச் சுமைகள் சுமத்தப்படுவதுடன் வீட்டுப்பாடமும் கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக மாணவர்மத்தியில் சிறுவயதிலேயே கல்வி மீது வெறுப்பும் விரக்தியும் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

தற்போது புதிய கல்வி திட்டத்துக்கு அமைய ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு மகிழ்ச்சியான கற்றல் பாடத்திட்டமே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள போதும் யாழ். நகரப்பகுதியில் உள்ள பாடசாலை சிலவற்றில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு அளவுக்கு அதிகமாக கல்விச்சுமைகள் சுமத்தப்படுகின்றன.

இதன் காரணமாக 'ஆரம்ப பாடசாலை மாணவர்கள் சிலர் பாடசாலை செல்ல அடம்பிடிக்கின்றனர். இதன் காரணத்தினால் எதிர்காலத்தில் கல்வி நிலையில் பாதிப்புஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்வுகாண உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*சிவா*
*யாழ்நகர்*

பகுதி 52 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...



அதுவரை நவனீதன் தந்த சாமான்களைச் சாப்பிட்டுக் கொண்டு இருந்ததுதான்.

'உங்களுக்குக் கிட்ட எந்த ஆஸபத்திரி இருக்குது'.

'எங்களுக்குக்கிட்ட ஒரு ஆஸ் பத்திரியும் இல்ல. ஈச்சிலமபத் தைக்குத்தான் போகவேணும்'.

'அது எவ்வளவு தூரம்'.

'ஒரு அஞ்சுமைல் தூரம் வரும்'. ஆத்தைக் கடந்து போகோணும். இருந்துபோட்டு வெள்ளைக்காரர் வருவாங்கள். பனடோல் வெள்ளைக்காரர் தந்தா அதைத் தான் காய்ச்சலுக்குப் போடுற. PHI சொலறார் பனடோல் தாறதெண்டா செக்பண்ணவேணுமெண்டு. பனடோல் தாறதுக்கு செக்பண்ண வேணுமெண்டா கடையில் போட்டு விக்கமாட்டாங்களே?.

இவரிடம் விடைபெற்று வருகையில், கடற்கரையில் ஒரு விடயத்தைக் கவனித்தேன். இது ஏனைய இடங்களிலும் காணப்பட்ட நிலைமைதான். அலை வந்த உயரத்துக்கு ஒரே உயரமான மரங்களில் பனைகள் கருகிப் போகின்றன. தென்னைகளுக்குப் பாதியில்லை. எங்களுடைய கற்பக தரு கடல் நீரை எதிர்க்கும் சக்தி இல்லாமல் உள்ளது. புளியமரங்களுக்கும் பாதிப்பில்லை. இதேசமயத்தில் கடல் நீர் வந்த இடங்களில் மட்டக்களப்பு, கல்லாறு போன்ற பகுதிகளில் மாமரங்களில் இருந்து தேன் போன்ற திரவம் வடிவதாக நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

வழியில் இருந்த முகாம்களைப் பார்த்தபடியே மூதூர் கிழக்குப் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக, சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்துக்குச் சென்றேன். அங்கு ஏற்கெனவே நான் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்தைச் சந்தித்தேன்.

இந்தச் சந்திப்பில் தறப்பாளின் கீழ் குடியிருக்கும் மக்களின் நிலைமைகள் தொடர்பாக உரையாடினோம். மீள்குடியேற்றம் தொடர்பான நிலைமைகளைக் கேட்டேன். அதற்கு அவர் - 'கூடாரத்துக்குள் நீண்டநாட்களுக்கு இருக்கமுடியாது. இன்னும் ஒரு மாதத்துக்குள் மாற்று ஏற்பாடு செய்து தருவதாக நிறுவனங்கள் ஒத்துக்கொண்டுள்ளன.

மீன்பிடி உபகரணங்களையும், தொழில் உபகரணங்கயையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வழங்க ஏற்பாடு செய்ய முடியும்.

எல்லாவற்றுக்கும் சுமார் ஆறு மாதங்கள் செல்லும். ஏனெனில், இன்று பணம் கொடுத்தாலும் வலை, படகு வாங்கமுடியாத நிலைமை உள்ளது. ஏனெனில், இது தென்கிழக்காசியா முழுவதுக்குமான பிரச்சினை. ஆகையால் இவற்றின் உற்பத்திக்கு ஆறுமாதங்களாகலாம்.

உதாரணத்துக்கு - வடமராட்சிக்கு 750 படகுகளை வழங்க கியுமெடிக்கா நிறுவனம் முன் வந்துள்ளது.

முதற்கட்டமாக அண்மையில் 14 படகுகளை இந்த நிறுவனம் வழங்கியிருந்தது. இதன்போது 20 பிரிவு வலைகளுக்குப் பதிலாக ஆறு வலைகளையே வழங்க முடிந்தது. ஏனெனில், வலை கொள்வனவு செய்து வழங்க முடியாத ளவுக்குத் தட்டுப்பாடு.

இதேபோன்றே படகுகளை தொழிற்சாலைகளால் விரைவாக வழங்க முடியாத நிலைமை. இந்த நிலைமையில் எமது கடற்படைத் தளபதி கேணல் சூசையுடன் எமது பகுதியிலேயே கூடுதலாகப் படகுகளை உற்பத்தி செய்யும் வாய்ப்புக்கள் பற்றி ஆராய்ந்தோம்.


தரமான மூலப் பொருட்களை எங்கிருந்து பெறலாம் என எமக்குச் சுட்டிக்காட்டிய அவர் - இவற்றை நிறுவனங்கள் மூலம பெற்றுத்தர ஏற்பாடு செய்வீர்களாகவிருந்தால், எம்மால் அது சாத்தியமே எனக் குறிப்பிட்டார்.

அவ்வாறு இந்தப் பொறுப்பை எம்மிடம் ஒப்படைக்க முடியுமாயின், நிறுவனங்கள் வேறுபணிகளை குறிப்பாக வீடு கட்டிக் கொடுக்கும் பணிகளைச் செய்ய முடியும். இந்த நிறுவனங்கள் அரசகட்டுப்பாட்டுப் பகுதியிலேயே வீடுகளைக் கட்டித்தர முன்வருகின்றன. அந்தப் பகுதிப் பிரச்சினை தானும் முதலில் தீரட்டும்.

*(தொடரும்...)*

மொழிபெயர்ப்பு வல்வையூரான்

# பொறியில் சிக்கிய ரத்வத்த;



மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சராகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்த, இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் றொகான் தளுவத்தை, மற்றும் பொலிஸ்மா அதிபராக இருந்த ராஜகுரு ஆகியோர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அந்தரிக்க வேண்டியதாயிற்று. இந்தப் பயணம் - பயங்கர திரைப்படக் காட்சியைப் போன்றது.

1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தவின் தனிப்பட்ட நாட்குறிப்பில் இரண்டு அரச முக்கிய கடமைகள் எழுதப்பட்டு இருந்தன.

இதற்கமைய முற்பகல் 10.00 மணிக்கு வெலிஓயாப் பகுதியில் உள்ள சிங்கள குடியேற்றத்துக்குச் செல்வது, அடுத்து வடக்கில் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகும்.

இந்த அரச கடமையில் பங்கேற்பதற்குக் காலை 9.00 மணிக்கு ஹவ்லொக் நகரில் உள்ள பொலிஸ் விளையாட்டு மைதானத்துக்கு ரத்வத்த வந்தார். இராணுவத் தளபதி றொகான் தளுவத்தை, பொலிஸ்மா அதிபர் ராஜகுரு, வட பகுதிக்கு கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன ஆகியோரும், அவரது மெய்ப்பாதுகாவலர்களும் இந்தப் பயணத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நிறுத்தப்பட்டு இருந்த ஹெலிகொப்டரைக் கண்டவுடனேயே - ரத்வத்தவுக்கு வேறுபாடு தெரிந்தது. மேற்படி ஹெலிகொப்டர் அவர் மற்றைய நாட்களில் பயணிக்கும் ஹெலிகொப்டர் அல்ல. இந்த விடயம் தொடர்பாக அவர் விசாரித்தபோது தெரிவிக்கப்பட்ட கருத்து - வழமையாக பயணிக்கும் ஹெலிகொப்டர் புதுப்பிக்கப்படுவதால், இந்த ஹெலிகொப்டர் அனுப்பப்பட்டது என்பதாகும். எனினும் பயணத்துக்காக ஒன்றிணைந்த அனைவருக்கும் அந்த ஹெலிகொப்டர் போதுமானதாக அமையவில்லை. ஆகையால், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த இடத்துக்கு ஹெலிகொப்டர் ஒன்று அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்துத் தயாரான நிலையில் இருந்த ஹெலிகொப்டரில் பயணம் செய்வதற்கு அனுருத்த ரத்வத்த தயாரானார். இந்த ஹெலிகொப்டரின் விமானியாக கொட்டகதெனிய இருந்தார். இந்த நினைவை மீட்டுக்கொண்ட ரத்வத்த - இவ்வாறு கூறினார் - "அந்த ஹெலிகொப்டரில் நானும், படைத்தளபதியும், பொலிஸ்மா அதிபரும் வடக்கு கட்டளையிடும் தளபதியும் ஏறிக்கொண்டோம். இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமதிபாலவும் ஏறிக்கொண்டார். எனது பாதுகாப்பு அதிகாரியான வேலரட்ணவும் இந்த பயணத்தில் கலந்துகொண்டார். எஞ்சி நின்றவர்களை மற்றைய ஹெலிகொப்டரில் வருமாறு கூறிவிட்டு, நாம் புறப்பட்டோம்.

அப்போது நேரம் முற்பகல் 9.30 இருக்கும். வெள்ளை மேகத்தின் ஊடாக புறப்பட்ட ஹெலிகொப்டர் - ஒரு மணிநேரத்திற்குள் அனுராத புரத்துக்கு மேலே வந்தது. அதிலிருந்து வெலிஓயாவுக்கு ஆகக் குறைந்தது 10 நிமிடத்திலாவது செல்லலாம் இந்த வேளையில் கறுத்த முகில் கூட்டங்கள் ஆகாயங்கள் முழுவதும் பரந்து காணப்பட்டன. சுற்றுப்புறம் பூமி எதுவுமே தெரியவில்லை. அனுராதபுரத்தில் இருந்து வெலிஓயாவுக்கு செல்வதற்கு சாதாரணமாக 10 நிமிடங்களே எடுக்கும்.

நான் நேரத்தைப் பார்த்தேன் அனுராதபுரத்தை ஹெலிகொப்டர் கடந்து அரை மணித்தியாலம் ஆகிவிட்டது. ஆனால் வெலிஓயா தெரியவே இல்லை. எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. விமானியிடம் வினாவினேன். அப்போது அவர் கூறிய பதில் - 'சேர் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நாம் இப்போது எங்கு நிற்கின்றோம் என்று ஒன்றுமே புரியவில்லை' என்றார். உடனே அங்கு இருந்தவர்கள் ஹெலிகொப்டரின் அனைத்து சமிக்ஞைகளும் இயங்குகின்றதா? என வினவினர். இதற்கு விமானி இல்லை எனப் பீதிலளித்தார்.

விமானங்களை ஓட்டுவதற்கு பயிற்சி பெற்றிருந்த ரத்வத்தவுக்கு மிகவும் பிரயோசனமான நேரமாக இது அமைந்தது.

வழி தடுமாறிய விமானம் எங்கு உள்ளது என அறிந்து கொண்டது சூரியன் மூலம். மேகங்களிடையே நான் சூரியனைக் கண்டேன். அதன்படி நாம் கிழக்குத் திசையில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். நாம் நிற்கும் இடத்தை சரியாகத் தெரிந்து கொள்வதற்கு எந்தக் கருவியும் எம்மிடம் இல்லை.

எனது ஊகத்தின் அடிப்படையில் கிழக்கில் இருந்து வலப் பக்கமாக ஹெலிகொப்டரைத் திருப்புமாறு கூறிக்கொண்டேன். ஆனால், எனது ஆலோசனையைப் பின்பற்றும் அளவுக்கு விமானியிடம் அமைதி காணப்படவில்லை. அவனால் வலப்பக்கம் திருப்ப முடியவில்லை. ஹெலிகொப்டர் தொடர்ந்து பறக்கிறது. இப்போது நேரம் 11 மணியைக் கடந்து விட்டது. இந்த நிலையில் - ஹெலிகொப்டரில் இருந்தவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை. எமக்கு தெரிநதது புலிகளின் காட்டுப் பகுதியில் நாம் பயணம் மேற்கொள்கின்றோம் என்று திடீரென அனுருத்த ரத்வத்தயின் மெய்ப்பாதுகாவலர் 'சேர் அதோ தெரிகிறது பூநகரி முகாம்' இதனைக் கேட்டவுடன் அனைவரும் பீதியில் ஆழ்த்தப்பட்டனர்.

நான் உடனே அவசரமாக வலப்பக்கம் திருப்பு எனக் கூறினேன். இதற்கு விமானி முடியாது, நாம் ஒருபோதும் கடற்கரைப்பகுதிக்குச் செல்ல முடியாது எனக் கூறினார்.

இந்த நிலையில் அடுத்து என்ன நடைபெறவுள்ளது என எமக்கு ஒன்றும் புரியவில்லை. திடீரென விமானி குரல் எழுப்பினான். 'சேர் 5 நிமிடங்கள் ஹெலிகொப்டர் பறப்பதற்குப் போதுமான எரிபொருளே இருக்கிறது' இந்த நிலையில் இங்கு இருந்தவர்களுக்கு உள்ளத்தில் எழுந்த கேள்வி...?

மீண்டும் அடுத்த வாரம்.

*நன்றி - லங்காதீப*



# தவக்கால நற்சிந்தனை



**''நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்'** *(மத்.14:31)*

'மனிதனின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான். ஆசை – துன்பத்தைத் தரும். பேராசை பெருந்துன்பத்தைத் தரும் என்றார் ஒரு பெரியவர். இதற்கு ஒரு இளைஞன் 'அப்படியானால் ஆசைப்படுவது தவறா? என்று கேட்டான். ஆசைப் படுவது தவறல்ல. ஆனால் கடலளவு ஆசையை மனிதன் வளர்த்துக்கொள்ளும்போது தான் துன்பங்கள் பெருகுகின்றன என்றார். அதுசரி துன்பங்கள், துயரங்கள் நீங்க வழிதான் என்ன? என்றான். உன் முழு நம்பிக்கையையும் இறைவன் மேல் வைத்து அமைதியான மனம் பெறுகின்ற போது, அவைகள் விலகுகின்றன என்றார் பெரியவர். ஆம் மனித வாழ்வின் செயற்பாடுகள் அனைத்துமே நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடக்கின்றன. நமக்குப் பரிமாறப்படும் உணவில் நம்பிக்கை இல்லை என்றால் உண்ணுவோமா? பயணம் தொடங்கும்போது போய்ச் சேருவோம் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் பயணிப்போமா? இந்த நம்பிக்கையும் இறை – மனித உறவில் அமையவில்லை என்றால் நிறைவுபெறாது.

மோ. தார்சீசியஸ்

# நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியிலிருந்து...






















































நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மூன்றாவது போராளியும் கொழும்புக்கு அனுப்பப்பட்டார்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் தம்பட்டையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளியான அகநிலா மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமாலை கொழும்பிலுள் அப்பலோ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

காயமடைந்த ஏனைய போராளிகளான விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் குவேனி, துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் சசிமதி ஆகியோருடன் இவரும் குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் இரவு மாற்றப்படவிருந்தபோதும் – ஹெலிகொப்டரில் இட வசதியின்மை காரணமாக இவர் அழைத்துச்செல்லப்படவில்லை.

இதனையடுத்து தொடர்ந்தும் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த போராளி அகநிலா நேற்று மாலை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் போர்நிறுத்தக் கண்கானிப்பு குழுவின் உதவியுடன் கொழும்பு அப்பலோ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# மின்பிறப்பாக்கிகள் திருட்டு அரச உயர் அதிகாரி கைது!

(திருகோணலை)

திருகோணமலை காணி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து 12 மின்பிறப்பாக்கிகள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக அரசாங்க உயரதிகாரியொருவர் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவும் சீனாவும் வழங்கிய மின்பிறப்பாக்கிகளில் 12 காணாமற்போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மின்பிறப்பாக்கிகள் இருந்த அறையின் பூட்டு உடைக்கப்படாத நிலையில் இவை மாயமாய்போனது தொடர்பாக காவலாளி ஒருவரும் சிற்றூழியர் ஒருவரும் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

# ரட்ணசிறி விக்கிரமநாயக்க பதவி விலகினார்!

(கொழும்பு)

மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் புத்தசாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான செயற்குழுவின் தலைவர் பதவியிலிருந்தும் ,சிறப்புரிமைகள் பற்றிய அங்கத்துவ பதவியிலிருந்தும் விலகியுள்ளார்.

இவர் தனது பதவிவிலகல் கடிதங்களை சபாநாயகர் லொக்கு பண்டாரவுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்தப் பதவிகளிலிருந்து திடீரென விலகியமைக்கு புத்தசாசன அமைச்சுப்பதவியை மாற்றுவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# நெரிசலில்...

சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் மயிலிட்டியைச் சேர்ந்த த.பொன்ராசா (வயது 41) பருத்தித்துறையைச் சேர்ந்த தேவராஜா அருள் (வயது 19) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது – கந்தர்மடச் சந்திக்கு அண்மையாக மக்கள் உரத்துக் கோசங்களை எழுப்பியவாறு பேரணியாக வந்தபோது இராணுவத்தினர் துப்பாக்கியை காட்டி மிரட்டியவேளையிலேயே மேற்படி நபர்கள் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# ஜனாதிபதியுடன்...

திற்கும் வரமுடியாதெனவும் சோமவன்ச கதிர்காமருக்குத் தெரிவித்தார்.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்வினைப்பெற்றுத் தருவதாக சோமவன்ச அமரசிங்கவிற்கு கதிர்காமர் உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடல் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அமைச்சர் கதிர்காமர் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட கலந்துரையாடல்களை நடத்துவதற்காக ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துள்ளதாகவும் இந்தக் கலந்துரையாடல் நாளை மாலை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# நாடு பிளவுபடுவதை தடுப்...

இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பிலும், தேர்தல் முறையிலும் உள்ள குறைபாடுகள் காரணமாக மக்களின் கருத்துக்கள் சரியான முறையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. எனவே, அரசியல் யாப்பிலும் தேர்தல் முறையிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு தனிநாடொன்று தேவைப்படுகிறது. ஆனால், பெரும்பாலான தமிழ்மக்களுக்கு இவ்வாறான தேவையில்லை என்பதனை நான் அறிவேன். 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பல துன்பங்களை அனுபவித்த தமிழ் மக்களுக்கு நாம் ஏதாவது ஒரு வகையில் அதிகாரத்தை வழங்க வேண்டும். இதற்கு பொருத்தமான தீர்வை நாம் கண்டுபிடித்துள்ளோம்.

சமஷ்டி நிர்வாகமுறையை அறிமுகப்படுத்தவதே இதற்குப்பொருத்தமான தீர்வாகும். இதன்மூலம் ஒரு நாட்டுக்குள் சகல இன மக்களும் கணிசமான அளவு அதிகாரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டைத் துண்டாடாமல் தனிநாடு உருவாகும் சந்தர்ப்பத்தை இல்லாது செய்து பல்வேறு பிரிவு மக்களுக்கும் சமஷ்டி நிர்வாக முறையின் மூலம் பூரண சுதந்திரத்தையும் சலுகைகளையும் அதிகாரத்தையும் வழங்க முடியும்.

எனவே, எனது அரசாங்கம் சமஷ்டி நிர்வாக முறையொன்றை ஏற்படுத்துவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. எமது அரசாங்கத்தில் எட்டு அல்லது ஒன்பது தரப்பினர் உள்ளனர். அதில் ஒரு தரப்பினர் சமஷ்டி நிர்வாகமுறையை அறிமுகப்படுத்துவதை எதிர்க்கின்றனர். நாம் இது தொடர்பாக அவர்களுடன் தொடர்ந்து பேச்சு நடத்திவருகின்றோம்.

எனினும், இந்தப் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் அல்லாது பேச்சு வார்த்தை மூலமே ஏதாவது தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அவர்களும் உள்ளனர்.

தற்போதைய அரசியலமைப்புக் காரணமாக எந்தவொரு அரசாங்கத்துக்கும் நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாது. கடந்தவருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 67 வீதமான வாக்குகளையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பெற்றபோதிலும் குறைந்தபட்ச பெரும்பான்மையையேனும் பெறமுடியாமற்போனது.

இதன்படி 2/5 வாக்குகளே எமக்குக் கிடைத்தன. உண்மையில் 67 வீதமான வாக்குகளைப் பெற்றவர்கள் 113 இற்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்றிருக்கவேண்டும். ஆனால், எமக்கு 106 ஆனசங்களே கிடைத்தன. எனவேதான் தற்போதைய அரசியலமைப்பு சிக்கல் நிறைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# 50 ஆயிரத்துக்கு...

யாழ்.பொதுஅமைப்புக்களின் அழைப்பின் பேரில் நடத்தப்பட்ட இந்த மாபெரும் பேரணியில் குடாநாட்டில்சகல பகுதிகளிலிருந்தும் வந்த சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகெண்டனர்.

நேற்று 11 மணியளவில் நல்லூர் பிரதேச மக்கள் குமாரசுவாமி வீதியால் யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சென்று, மாணவர் அமைப்புக்கள், தீவக, வடமராட்சி, காரைநகர், தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, அச்சுவேலி, கோப்பாய், தென்மராட்சிப் பகுதிகளில் இருந்துவந்த மக்களுடன் நேரடியாகப் புறப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மரணமடைந்த மாவீரர்களுக்கு ஒரு நிமிட மௌன வணக்கத்தைத் அடுத்து பதாகைகளையும், கோஷங்களையும் ஏந்தியவாறு புறப்பட்ட இந்தப் பேரணி பலாலி வீதி ஊடாக பரமேஸ்வராச் சந்தியை வந்தடைந்தது.

இதேவேளை, யாழ்.பிரதேச மக்கள் யாழ்.இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடி அங்கிருந்து பேரணியாக கந்தர்மடம் சந்தியை வந்தடைந்தனர். இந்த இரண்டு பேரணிகளும் கந்தர்மடம் வீதியூடாக நல்லூர் கந்தசுவாமி கோவிலைச் சென்றடைந்து – நல்லூர் பின்வீதி வழியாகக் கோஷங்களை எழுப்பியவாறு அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய யாழ்.மாவட்ட அலுவலகத்தில் வதிவிடப் பிரதிநிதியிடம் சர்வமத தலைவர்கள் தமது மகஜரைக் கையளித்தனர்.

மேற்படி மகஜரைத் தமது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைப்பதாக –அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பேரணியாகச் சென்று யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவகத்தைச் சென்றடைந்து யாழ். மாவட்ட கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் கடற்தொழிலாளர்கள் சார்பாக தவரட்ணம் மகஜரைக் கையளித்தார்.

தொடர்ந்து பேரணியாகச் சென்ற மக்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட அலுவலகத்தைச் சென்றடைந்து யாழ். மாவட்ட பிரதிநிதியிடம் தீவக நலன் காப்பக ஒன்றியத்தின் சார்பிலும், இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் ந. கணேசன் தமது மகஜரைக் கையளித்தார்.

இதன்பின்னர் கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாகச் சென்ற மக்கள் யாழ்.கண்டி வீதியூடாக காலை 11.50 மணியளவில் யாழ். செயலகத்தைச் சென்றடைந்தனர்.

இவர்கள் உணர்ச்சியின் உச்சக்கட்டமாக யாழ்.செயலக வளவினுள் உட்புகுந்து யாழ்.செயலக கட்டடத்தின பிரதான வாயிலின் முன் ஒன்றுகூடி அமர்ந்தனர். அங்கு யாழ்.ப.நோ.கூ.சங்க தலைவர் சூ. சிறில் தலைமையில் கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இங்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வகுமார் அரச அதிபர் ஊடாக வழங்கப்படும் மகஜரை வாசித்தார்.

ஜனாதிபதிக்கும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குமான மகஜரை அரச அதிபர் கணேஷிடம் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வழங்கினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன், சிவநேசன் ஆகியோரும் மத குருமார்கள், கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் என ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகெண்டமை குறிப்பிடத்தக்கது.

# படுகொலைகளை ஆராயும்...

மாகவும் நாங்கள் யார் காரணம் என்பதை காட்டி வருகின்றோம். படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் படையினரும், படையினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவினரும்தான்.

இவற்றுக்கு உடன் நடவடிக்கை எடுத்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதைத்தவிர– இதற்கொரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டு நீதியான தீர்வு வழங்கப்படும் என்று எம்மால் நம்ப முடியாதுள்ளது. இந்த விடயம் யதார்த்தபூர்வமாக அமையும் என்று நாம் நம்பவில்லை.

நாங்கள் நோர்வே அனுசரணையாளர்களுக்கு எமது செய்தியை அனுப்பியிருக்கிறோம். இதைவிட தொலைபேசி மூலமாகவும் எமது அதிருப்தியைத் தெரிவித்திருக்கின்றோம்.

தொடர்ச்சியாக இவ்வாறான படுகொலைகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இயங்கும் குழுக்கள் இவ்வாறான படுகொலை முயற்சிகளில் ஈடுபடுவது ஒரு நிழல் யுத்தத்தை விடுதலைப்புலிகள் மீதும் எமது மக்கள் மீதும் மேற்கொள்ளும் நடவடிக்கை. இந்த யுத்த நிறுத்த சூழலைத் தொடர்ந்து பேணுவ தற்கு உகந்ததாக இருக்காது. இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

எனவே நோர்வே அனுசரணையாளர்களும். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் இதற்கு ஒரு முடிவை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவதாக இருந்தால் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை நாம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கவேண்டும். இயல்புநிலை ஏற்படுத்தப்படாத நிலையில் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

படுகொலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தொடர்ந்தும் நடைபெறுகின்றது. போர்நிறுத்த உடன்படிக்கையில் ஒரு கருத்துத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. வடக்கு – கிழக்கு தாயகப் பிரதேசத்திலிருந்து செயற்படுகின்ற ஆயுதக் குழுக்கள் வெளியேற்றப்படவேண்டும். அவர்களது ஆயுதங்கள் களையப்படவேண்டும். இதனை இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்டிருக்கின்றன.

இதனைத் தொடர்ந்து பேணாவிட்டால் இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பேணுவது மிகவும் நெருக்கடியான நிலைமையாக இருக்கும். இவ்வாறான சம்பவம் தொடருமானால் யுத்தநிறுத்தத்துக்கு பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்துமெனச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்புக்களை அமைப்பதில் நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக தீவிரமாக இணைந்துகொண்டு இருக்கின்றவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான பணிகளை மேற்கொள்கின்ற எமது முக்கிய பொறுப்பாளர்கள் மீது படைத்தரப்பு இவ்வாறான படுகொலை முயற்சிகளை மேற்கொள்வது மேற்படி முயற்சிகளைப் பலவீனப்படுத்துவதாகவே இருக்கின்றது.

எமது நிலைப்பாடுகள் தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

எதிர்வரும் நாட்களில் நோர்வேத் தூதுவர் எம்முடன் இதுபற்றிப் பேசுவதாக அறிவித்திருக்கின்றார். நாம் வழங்கிய பதில்களுக்கு சாதகமான பதில் கிடைக்குமாக இருந்தால் பல சாத்தியப்பாடுகள் உருவாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சரியான விதத்தில் கட்டமைப்புக்களினூடாக, புனரமைப்புப் பணிகளாக இருக்கலாம், மனிதாபிமான பணிகளாக இருக்கலாம், மீள்கட்டுமானப் பணிகளாக இருக்கலாம் அனைத்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. இதனையே வலியுறுத்திக் கூறுகின்றோம் எனத் தெரிவித்தார்.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 99.07 | 99.97 |
| ஸ்ரேலிங் பவுண் | 189.51 | 192.17 |
| யூரோ | 129.88 | 132.05 |
| சுவிஸ் பிராங் | 84.17 | 86.15 |
| யென் | 0.9430 | 0.9608 |




# மரண அறிவித்தல்கள்

## தர்மசறோஜினி பஞ்சரத்தினம்

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை தர்மசறோஜினி பஞ்சரட்ணம் 28.02.2005 திங்கட்கிழமை கிளிநொச்சியில் காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற தபால் அதிபர் பஞ்சரட்ணத்தின் (தும்பியப்பா) மனைவியும், காயத்திரி, காலஞ்சென்ற நிமல் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு கிளிநொச்சி – பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள ஊடக இணைப்பு செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை நடைபெற்று 10.00 மணிக்கு இறுதிக் கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
வே.கு.பஞ்சரட்ணம்
(கணவர்)

பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.